விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 11 சனிக்கிழமை (23.02.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 066

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## நெஞ்சைப் பதற வைக்கும் ஆவணப்படக் காட்சிகள்

### டெல்லியில் நேற்று வெளியிடப்பட்டது






(புதுடில்லி)

இலங்கையின் போர்க் குற்றங்களை அம்பலப்படுத்தும் சனல் 4 தொலைக்காட்சியின் நோ பயர் சூன் என்கிற ஆவணப்படம் முதன் முறையாக டில்லியில் நேற்று வெளியிடப்பட்டது.

டில்லியில் உள்ள அரசியல் அமைப்பு கழகத்தில் நேற்றுப் பிற்பகல் இந்த ஆவணப்படம் ஒளிபரப்பானது. சர்வதேச மன்னிப்புச் சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

இதில் இலங்கையில் போர் இடம்பெற்ற பகுதிகளில் பாதுகாப்பான பகுதியாக அறிவிக்கப்பட்ட இடங்களிலும் இராணுவம் கொத்துக் கொத்தாகக் குண்டு வீசிய கொடூரத்தை வெளிப்படுத்தும் காட்சிகள், ஊரெங்கும் மக்கள் உயிரிழந்து சடலங்களாக கிடக்கும் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

தாயும், குழந்தையும் ஒன்றாக வீழ்ந்து கிடப்பது, மருத்துவமனைகளில் நூற்றுக்கணக்கானோர் உடல் சிதைந்த நிலையில் சிகிச்சை பெறு (20ஆம் பக்கம் பார்க்க)

## உதவி செய்ய அயலவர்கள் பின்னடிப்பு விபத்தில் காயமடைந்த இளைஞன் மரணம்

### உடன்பிறப்பை காப்பாற்றத் துடித்த சகோதரன்

(யாழ்ப்பாணம்)

இரணைச் சகோதரர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததோடு மற்றையவர் படுகாயமடைந்தார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள பாலத்தடியில் இடம் பெற்றுள்ளது.

இதில் இளவாலை சிறுவிளானைச் சேர்ந்த ராஜ்குமார் ரவிராஜ் (வயது 24) என்பவர் உயிரிழந்துள்ளதோடு அவரோடு உடன்பிறந்த ராஜ்குமார் ரகுராஜ் (வயது 24) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று இரவு ஒரு மணியள (20ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை கண்காணிப்பகத்தின் குற்றச்சாட்டுக்கு இராணுவம் மறுப்பு

(கொழும்பு)

இலங்கைப் படையினர் பாலியல் ரீதியான குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக மனித உரிமை கண்காணிப்பகம் கடுமையான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் இக்குற்றச்சாட்டை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய மறுத்துள்ளார். பாலியல் துன்புறுத்தல்கள், பாலியல் வன்கொடுமை மற்றும் தமிழ்ப் பெண்கள் மற்றும் ஆண்கள் மீது மூன்றாம் தர துன்புறுத்தல்களை படையினர் மேற்கொண்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் (20ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு பிரி.பயணம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் எதிர்வரும் 28ஆம் திகதி பிரித்தானியாவுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

அனைத்துலக தமிழர் பேரவையின் அழைப்பின் பேரில் இவர்கள் இருவரும் பிரித்தானியாவுக்கான விஜயத்தை மேற்கொள்கின்றனர். அங்கு இவர்கள் பலதரப்பட்டவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் 26ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கூட்டத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அமெரிக்கா பிரேரணை ஒன்றினைக் கொண்டுவரவுள்ளது.

இதேபோல் ஐ.நா. மனித உரிமைகள் (20ஆம் பக்கம் பார்க்க)

## மொழிப் பிரச்சினைக்கு 1956 அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

மொழிப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இலவச தொலைபேசி எண் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திணைக்களங்களில் மற்றும் பொது இடங்களில் மொழிப் பிரச்சினை ஏற்பட்டால் உடனடி 1956 என்ற தொலைபேசி எண்ணுக்கு அழைத்தால் உடனடியாக தீர்வு கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


அரச கரும மொழிப் பிரச்சினை தொடர்பில் ஏற்பட்ட சிக்கலையடுத்து இவ் இலவச தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (எ)

# இந்தியா ஆதரவு!

### நிலைப்பாடு மாறாது என்கிறார் பிரதமர்

(புதுடில்லி)

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரவிருக்கின்ற தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கும் என்று பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார். தமிழக காங்கிரஸ் எம்.பிக்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கை தலைவர் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை மாநாட்டுக்கான இலங்கைத் குழுத்தலைவராக அமைச்சர் மகிந்த சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவிற்கு அமைய இலங்கைப் பிரதிநிதிகள் குழுவிற்கு மகிந்த சமரசிங்க தலைமை தாங்குவார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை மாநாடு நடைபெறவுள்ளது. ஆரம்பத்தில் இந்தக் குழுவில் அமைச்சர்கள் அங்கம் வகிக்கப் போவதில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. (எ-1)

## பாலச்சந்திரனின் கொலை விவகாரம் இந்.நாடாளுமன்றில் நேற்றும் அமளி

(புதுடில்லி)

பிரபாகரனின் மகன் கொலை விவகாரத்தை விவாதிக்க அனுமதி மறுத்ததால், நாடாளுமன்றத்தில் நேற்றும் அமளி ஏற்பட்டது. இதனால் சபை மதியம் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் இராணுவத்தினரால் பிடித்து வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட தகவலை சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டது.

இதற்கு தமிழகத்தில் அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பில் இருந்தும் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் நேற்றுத் தொடங்கிய நாடாளுமன்றத் கூட்டத்தொடரிலும் இந்த பிரச்சினை எழுப்பப்பட்டது.

பிரபாகரன் மகன் கொலை பற்றி விசாரணை (20ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை தூதரகம் முற்றுகை

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரனை கொடூரமாகக் கொலை செய்தமையைக் கண்



டித்து நேற்று மாலை மனிதநேய மக்கள் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் தமிமுன் அன்சாரி தலைமையில் சென்னையில் உள்ள இலங்கைத் துணைத்தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடைபெற்றது.

இதில் த.மு.மு.க, புனங்குடி அனீபா, இயக்குநர் புகழேந்தி, மே பதினேழு இயக்கத் தோழர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்தப் போராட்டத்தில் பத்திரிகையாளர்களிடம் பேசிய தமிமுன் அன்சாரி,

இலங்கை அரசு தமிழீழ மக்களை போர் என்ற பெயரில் கொடூர கொலை செய்து அழித்தது. தற்போது விடு (20ஆம் பக்கம் பார்க்க)

## ஹலால் சான்றிதழ் குறித்து பொது பல சேனா எச்சரிக்கை

(கொழும்பு)

ஹலால் சான்றிதழ் வழங்கப்படுவதை ஒரு மாதத்திற்குள் திரும்ப பெறாவிட்டால் உத்தியோகபூர்வமற்ற காவல்துறையினராக செயற்படப் போவதாக பொது பல சேனா அமைப்பு அறிவித்துள்ள மையானது நாட்டின் சட்டம் மற்றும் சமாதானத்திற்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் என முஸ்லிம், தமிழ் தேசிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.


பகிரங்கமாக விடுக்கப்பட்டுள்ள இந்த அச்சுறுத்தல் முஸ்லிம் மக்களுக்கும் ஹலால் சான்றிதழுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் அல்ல முழு நாட்டினது சட்டத்திற்கும் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும்.

அத்துடன் ஒருதலை பட்சமாக மிலேச்சத் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை-இந்தியாவுக்கு இடையில் தீ மூட்டுவதற்கு சதி முயற்சி-ஹெகலிய



இந்தியா பிரபல்யமான நாடு இலங்கையோ சிறிய தீவு. இந்த இரு நாடுகளுக்கும் இடையில் தீ மூட்டுவதற்கும் சிலர் முயற்சிக்கின்றனர் என்று ஊடகத் துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

முன்னதாக கேள்விகளை எழுப்பிய ஊடகவியலாளர்கள்,

இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இலங்கை கடற்படையினர் இந்திய மீனவர்கள் மீது தாக்குதல்களை நடத்தியதாகவும் அவர்களின் மீன் பிடி உபகரணகள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி, இந்தியாவிற்கு செல்கின்ற இலங்கை பக்தர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படுகின்றன. இவ்வாறான நிலையில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்று வினவினர்.

இந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இவ்வாறான விவகாரங்கள் தொடர்பில் இராஜதந்திர ரீதியிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான விவகாரங்களை வைத்து இரு நாடுகளுக்கும் இடையில் சிலர் தீ மூட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்கின்றனர். வடக்கில் மீன்பிடியில் எவ்விதமான வீழ்ச்சியும் ஏற்படவில்லை. அங்கு மீன்பிடி அதிகரித்திருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார் என்றார்.(எ-11)

## 3 ஆம் வருட நினைவு தினம்

பிறப்பு: 11.07.1941
இறப்பு: 23.02.2010



**அமரர் சின்னத்தம்பி குஞ்சி**

(கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை)

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: சி.இராசகுமாரன்
(ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை)
குடும்பத்தினர் (1798)

நூலக வீதி, மந்திகை

## இதய நண்பனுக்கு கண்ணீர் அஞ்சலி



**ராஜ்குமார் ரவிராஜ்**

(A/L 2008 - Maths J/H/C)



காலையில் வந்த செய்தி கேட்டு
எம் இதயம் வெடித்ததடா...
உள்ளம் ஒன்றாகி உருவில் இரண்டாகி
ஊர் போற்ற தோழனாய்
தோளோடு தோள் தந்தாய்
இன்று தன்னந் தனிவழி
ஏன் சென்றாய்?
பதறுகின்றோம் உன் பிரிவால் நாம்

**உன்னை பிரிந்த உறவுகள்**

(சி-2505)

## பாப்பரசருக்கு ஜனாதிபதி வாழ்த்து

பாப்பரசரின் இராஜினாமா அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது நன்றிக்கடமையையும் நல்வாழ்த்தையும் தெரிவித்து பாப்பரசர் 16-வது பெனடிக்கிற்கு வாழ்த்துச் செய்தி யொன்றை அனுப்பி வைத்துள்ளார்.(எ-11)

## மயானத்தில் இருந்து வெடிபொருள் மீட்பு

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசத்திலிருந்த பொது மயானத்திலிருந்து வெடிப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

அம்பாறை, திருக்கோயில் தம்பிலுவில் பொது மயானத்தில் இருந்தே இந்த வெடிப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

சீ-4 ரக வெடிப்பொருட்கள் ஒரு கிலோ, சைக்கிள் போல்ஸ் மற்றும் கறுப்பு வெடி மருந்து பொருட்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக விசேட பிரிவினர் அறிவித்துள்ளனர்.(எ)


## வான் விற்பனைக்கு

Toyoto Dolphin LH 113
96 Model 6 Nuts
GQ XXXX
தொடர்பு-0773034467 (1799)

## காணி விற்பனைக்கு

மாம்பொழில், கச்சாய் வீதி, கொடிகாமத்தில் நிலப்பரப்பு 15 பரப்பு 8 குழி உடைய காணி விற்பனைக்குண்டு. (துபாற் கந்தோர், கல்லூரி, என்பவற்றிற்கு அருகாமையில்)

தொடர்புகளுக்கு:-
சு.அப்பன் (மாரியம்மன் மோட்டோர்ஸ்)
மாரியம்மன் வீதி, கோப்பாய் மத்தி,
கோப்பாய். (1789)

பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் உயர்தரமான பட்டப்படிப்பினை இன்றே உறுதி செய்யுங்கள்

## LL.B (UK) கற்கை நெறி

யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்
Prince City Campus இன்
EdHat IHD in Law leading to LL.B (UK)

Batch 4 இற்கான பதிவுகள் நடைபெறுகின்றன



- உலகத் தரம் வாய்ந்த கற்கை நெறி.
- இலங்கை மற்றும் Uk பாட விதானங்களை உள்ளடக்கியது.
- யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
- இலகு தவணை கொடுப்பனவு முறை.
- இலவசமான ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப கற்கை திட்டங்கள்

**PRINCE CITY CAMPUS**
இல. 275, மணிக்கூட்டு கோபுர வீதி (Clock Tower Road),
யாழ்ப்பாணம். தொ.பே. :- 0214923855 Hotline : 077 077 2272




01-03-2013 இல்
மாணிக்கவிழாவினைக்
கொண்டாடும்

எமது சமூகத்தை உயர்த்தும்

**The Express Institute** இனை

எம் மனங்களில் எந்நாளும்! விரும்பிய காலத்தில்
விதந்து உவந்தேற்ற 'எக்ஸ்பிறஸ்' நிறுவனமே...!
எம் சிறார்கள் உங்கள் கைகளில்...!
மாணிக்க விழாவினைக் கொண்டாடும்
இந்நிறுவனம், நூற்றாண்டு விழாவினைக்
காண விழைகின்றோம்;
வாழ்த்துக்கள்...!

வாழ்த்துவோர்,
பா. செல்வசேனக்குருக்கள்
குடும்பம்.

கற்பகவிநாயகர் ஆலயம்,
இருபாலை.

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

**2013 February- 2013 July**

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொன்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

(சி/2497) விண்ணப்ப முடிவுத் திகதி : 28.02.2013

## கொக்குவில் வளர்மதி முன்பள்ளி

### ஆசிரியர் தேவை

வளர்மதி நிறைவாழ்வகம், கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் என்பவற்றால் நடாத்தப்படும் மேற்படி முன்பள்ளி மாணவர்களுக்கும், எமது ஆங்கிலப் பிரிவு மாணவர்களுக்கும் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை.

**முன்பள்ளி**

தராதரம்: முன்பள்ளி கற்கையில் தேர்ச்சியும், அனுபவமும் கொண்டவர்கள். பாடல், ஆடல், விளையாட்டின் ஊடாக கற்பிக்கும் ஆற்றல் கொண்டவர்கள். ஆங்கிலஅறிவு உள்ளவர்கள்.

கணனி அறிவு மேலதிக தகுதியாகக் கருதப்படும்.

**ஆங்கிலப் பிரிவு**

தராதரம்:-ஆங்கிலத்தில் உயர்தர டிப்ளோமா/பட்டம் பெற்றவர்கள், சிறப்புத்தேர்ச்சியும், அனுபவமும் கொண்டவர்கள். பேச்சு, எழுத்து, பாடல்கள் என்பன கற்பிப்பதில் திறமை கொண்டவர்கள்.

மேற்படி விளம்பரத்திற்கு பொருத்தமானவர்கள் 25-02-2013 திங்கட்கிழமை அன்று எமது நிலையத்திற்கு காலை 10.30 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரடியாக சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கட்கு அவர்களது திறமைக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படுவதுடன் EPF, ETF என்பன எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.

சம்பியன் லேன் -கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்,
கொக்குவில். வளர்மதி நிறைவாழ்வகம்- (2001)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நாம் படைப்பதுதான் சொர்க்கமும் நரகமும்

ஒரு கோயிலில் பெரியவர் ஒருவர் ஆன்மீகச் சொற்பொழிவொன்றை நிகழ்த்திக் கொண்டிருந்தார்.

அவரது சொற்பொழிவில் கடவுள், சொர்க்கம், மனிதன் ஆகியவை பற்றி விபரமாகப் பேசினார். அனைவரும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

அந்தக் கூட்டத்தில் ஒரு தத்துவஞானியும் அமர்ந்திருந்தார். அவர் சொற்பொழிவாளருடைய நண்பர்.

சொற்பொழிவாளர் சொற்பொழிவை நிறைவு செய்ததும் அந்தப் பெரியாரிடம் விரைந்து, ''எப்படி இருந்தது என் பேச்சு?'' என்று வினவினார்.

அதற்கு தத்துவஞானி, ''நீங்கள் பேசியவை ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருந்தது'' என்றார்.

"என்ன முரண்பாடு?" என இவர் கேட்டார்.

"கடவுளை நம்புபவன் சொர்க்கத்திற்குச் செல்வான் என்று முதலில் நீங்கள் கூறுனீர்கள். அதே நேரம் நல்லவனாக வாழ்பவன் சொர்க்கத்திற்குப் போவான் என்றும் சொன்னீர்கள்" என்றார்.

"ஆமாம்! அதிலே என்ன முரண்பாடு கண்டீர்கள்?" என்றார் பெரியவர்.

தத்துவஞானி அமைதியாக, "இந்த உலகத்தில் ஒருவன் எல்லாத் தப்பும் செய்து கொண்டே, கடவுளை நம்பினான் என்றால் அவன் சொர்க்கத்திற்குப் போவானா? அல்லது தவறு ஏதும் செய்யாமல் ஒழுங்காக வாழ்ந்து இறைவனை நம்பாமல் இருக்கிறவன் நரகத்திற்குப் போய் விடுவானா?

"கடவுள் நம்பிக்கையே இல்லாத ஒரு நல்லவன் என்ன செய்வான்? எங்கே போவான்? இவ்வுலகில் கடவுள் நம்பிக்கையோடு வாழ்வது முக்கியமா? அல்லது நல்வனாக வாழ்வது முக்கியமா?'' என்று கேட்டார்.

இவை அனைத்தும் கேட்டதும் அந்தப் பெரியவர் குழப்பம் அடைந்தார்.

தத்துவஞானி கூறியதும் நியாயம் தானே; கடவுளை நம்புபவன் சொர்க்கத்திற்குச் செல்வான் என்றால், அமைதியாக கடவுளை நம்பிக் கொண்டு, இந்த உலகில் அனைத்து விதமான பிழைகளையும் செய்து கொண்டே இருந்து விடலாமா?

பேச்சாளர் குழப்பத்துடனேயே வீட்டிற்குச் சென்று தூங்கி விட்டார்.

அவர் தூங்கியபோது அவருக்கு ஒரு கனவு வந்தது.

கனவில் அவர் ஒரு புகையிரதத்தில் சென்று கொண்டிருந்தார். எதிரில் அமர்ந்திருப்பவரைப் பார்த்து ''நாம் இப்போது எங்கே போகிறோம்?'' என்று கேட்டார்.

''சொர்க்கத்திற்குப் போகிறோம்?'' என்று எதிரில் இருந்தவர் பதிலளித்தார்.

புகையிரதம் ஓரிடத்தில் நின்றது. அந்த இடம்தான் சொர்க்கம் என்று நினைத்து இவர் இறங்கினார். ''இங்கே கௌதம புத்தர் இருப்பார்; சோக்ரடீஸ் இருப்பார்; அவர்களைப் பார்ப்பதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் இது'' என்று நினைத்து அவர் சுற்றிலும் பார்த்தார்.

ஒரே பாலைவனம் போல் காட்சியளித்தது. பச்சை பசுமைக்கே இடம் இல்லை. எங்கு பார்த்தாலும் பொட்டல் காடு. ஒரு சில இடங்களில் எலும்பும் தோலுமாக சிலர் அமர்ந்திருந்து தியானம் செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்களிடம் போய் இவர் "புத்தர், சோக்ரடீஸ் இவர்கள் எல்லோரும் எங்கே இருக்கிறார்கள்?'' என்று ஆவலுடன் வினவினார்.

"அப்படி யாரும் இங்கே இல்லையே...'' என்று அவர்கள் பதிலளிக்க, இவர் ஓடி வந்து புகையிரதம் நின்ற இடத்தை அடைந்தார்.

நரகத்திற்கு செல்வதற்கு ஒரு புகையிரதம் ஆயத்த நிலையில் நின்றது. இதில் அவர் ஏறி அமர்ந்து கொண்டார்.

புகையிரதம் வேகமாகப் புறப்பட்டது. எங்கு பார்த்தாலும் நீரோடைகள், நீர் நிலைகள், நந்தவனங்கள், மலர்கள், பறவைகள் கூட்டம் தென்பட்டன.

அங்கே இருந்தவர்கள் ஒரே ஆனந்தக் களிப்பில் திளைத்திருந்தார்கள்.

சொர்க்கத்தில் காணாத சிலர், இங்கு நரகத்தில் இருப்பதைக் கண்டார்.

இவை அனைத்தையும் பார்த்த இவருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. "இது என்ன நரகம் தானா?'' என்று யோசித்துக் கொண்டு புகையிரதத்தை விட்டு இறங்கினார்.

அருகில் இருந்தவர்களிடம் விசாரித்த போது, இது நரகம்தான் என்று அமைதியாகப் பதில் வந்தது.

''எனக்கொரு சந்தேகம், புத்தரும் சோக்ரடீசும் லாவோட்சுவும்– இவர்களைப் போன்ற இன்னும் பலரும் (உருவக்) கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள். அவர்கள் எல்லாம் இங்கே எப்படி வந்தார்கள் என்பதுதான் எனது சந்தேகம்'' என்று தன் குழப்பத்தை அவர்களிடம் கூறினார்.

அதற்கு அங்கிருந்தவர்கள் ''ஐயா இப்போது இங்கே நீங்கள் பார்க்கும் அனைத்து விடயங்களும் மேற்கூறியவர்கள் போன்ற மற்ற மகான்களும் இங்கே வர ஆரம்பித்த பின்னர்தான் உண்டாக ஆரம்பித்தன.

''இந்தப் பிரதேசத்தையே அவர்கள் மாற்றி விட்டார்கள். இங்கே இருப்பவர்கள் யாரும் சொர்க்கத்திற்குச் செல்வதற்கு விரும்புவதில்லை'' என்று கூறினார்கள்.

இந்தக் கதையின் மூலம் நாம் ஒன்றை விளக்கிக் கொள்ள வேண்டும். அதாவது... நல்லவர்கள், எங்கே இருக்கிறார்களோ, அந்த இடம் சாதாரணமான இடமாக இருந்தாலும், ஏன் நரகமாக இருந்தாலும் கூட அதுவே சொர்க்கமாக மாறி விடுகிறது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நெற் செய்கை விவசாயிகளுக்கு கடன் வழங்கும் திட்டம்

## அறிமுகப்படுத்தியது வர்த்தகத்துறை அமைச்சு

நெற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு அவர்களது அறுவடையை பேணி உயர்ந்த விலையை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஏதுவாக கடன் வழங்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தகத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தக் கடன் மக்கள் வங்கி மூலம் வழங்கப்படவுள்ளது. தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை பேணி வைத்திருந்து உயர்ந்த விலையில் விற்பனை செய்வதற்கு ஏதுவாக இக்கடன் வழங்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்நாட்டு விவசாயிகளுக்காக நடைமுறைப்படுத்தும் பல்வேறு திட்டங்களுக்கமைய அவர்களுக்கு தவணைக்கடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வங்கிக்கு ஆலோசனை வழங்கியிருந்தார். அதற்கமையவே இந்த கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அறுவடை செய்த உடனேயே அந்த அறுவடையை குறைந்த விலைக்கு கறுப்பு சந்தை முதலாளிகளுக்கு விற்பனை செய்யாமல் களஞ்சியப்படுத்தி வைத்து நிர்ணய விலைக்கு விற்பனை செய்வதற்கு இந்த கடன் வழங்கும் திட்டம் உதவியாக இருக்கும்.

மக்கள் வங்கி மூலம் வீ–விஸ்ஸ மற்றும் வீ- மடபன என்ற பெயரில் இரண்டு கடன் திட்டங்கள் விவசாயிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கடனுக்கு குறைந்த வட்டியே அறவிடப்படும். அறுவடையை உயர்ந்த விலைக்கு விற்பனை செய்யும் வரை நெல் உற்பத்திக்கான செலவை ஈடு செய்து கொள்வதற்கு இது வாய்ப்பாக இருக்கும்.

இந்த இரு கடன் திட்டங்களில் ஒன்றுக்கு 50 ஆயிரம் ரூபாவும் மற்றைய கடனாக ஒரு இலட்சத்து ஐம்பதாயிம் ரூபாவும் வழங்கப்படும்.

தற்போது நாடெங்கிலும் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது. நெல் கொள்வனவு சபைக்கு மேலதிகமாக நெல் சந்தைப்படுத்தும் நிலையங்களுக்கும் நெல்லை கொள்வனவு செய்யும் படி அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை, கடந்த வருடம் பெரும்போகத்தில் நெல் கொள்வனவிற்காக தற்போது கிழக்கு, வடமேல், வடக்கு, அம்பாறை மற்றும் அநுராதபுரம் ஆகிய வலயங்களை மையமாகக் கொண்டு நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியங்கள் திறக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் காலங்களில் அறுவடை செய்யப்படும் பிரதேசங்களை கவனத்திற் கொண்டு அப்பிரதேசங்களிலும் களஞ்சியங்களை திறப்பதற்கும் கமநல சேவை நிலையங்களின் ஊடாக நெல் கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (செ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 70-140 | 70 | 65 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 250 |
| தக்காளி | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 40 | 60 | 60 |
| கரட் | 90 | 120 | 140 |
| பூசணி | 30 | 40 | 60 |
| புடோல் | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 40 | 80-100 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 60 | 90 | 90 |
| பாகற்காய் | 100 | 60 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 90 |
| கருணைக் கிழங்கு | 60 | -- | 80 |
| பயறறங்காய் | 100 | 80 | 120 |
| லீகஸ | 110 | 120 | 130 |
| பீற்றூட் | 50 | 60 | 60 |
| கறிமிளகாய் | 140 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 500 | -- | -- |
| போஞ்சி | 100 | 70 | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | -- | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20-30 | 40 |
| தேசிக்காய் | 50 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 40-50 |
| இராசவள்ளி | 120 | 120 | 100 |
| வெங்காயப்பூ | 140 | 100 | 120 |

# இராசி பலன்

23.02.2013
(மாசி 11, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 1.59 மணிவரை
பூசம் பின்னிரவு 12.42 மணிவரை
இராகுகாலம் 9.30-11.00 மணிவரை
சுபநேரம் 3.30-5.00 மணிவரை
சனிப்பிரதோச விரதம்.

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தாய் வழியில் அனுகூலமுண்டு, கல்வி வளர்ச்சிக்காக எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன நன்மையுண்டு.

**இடபம்** உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், எடுத்த காரியங்கள் கைகூடும், தன்னம்பிக்கை கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்** விவாதங்கள் ஏற்படலாம், உறவினரின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், இனிய செய்திகள் இல்லம் தேடி வரலாம், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**கடகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முன்வருவீர்கள், கற்பனை மிகுதியான நாள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**சிங்கம்** மாற்றங்களால் ஏற்றம் காண்பீர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர் நலன் கருதி சில செலவுகள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், முயற்சிகளில் தாமதமுண்டு.

**கன்னி** அதிர்ஷ்டகரமான நாள், பயணங்கள் கைகூடும், இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயரும், விரதங்களில் நம்பிக்கை கூடும், போசன நன்மையுண்டு.

**துலாம்** குடும்பத்தினர்களின் ஒத்துழைப்பால் தொழில் வளர்ச்சி ஏற்படும், தூர தேசச் செய்திகள் மன மகிழ்ச்சி தரும், ஆரோக்கியத்துடன் செயற்படுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலன் கிடைக்கும்.

**தனுசு** எதையும் சிந்தித்து செயற்படுத்த வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்ச்சி தேவை, முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், சேமிப்பில் சிறிது கரையலாம்.

**மகரம்** ஆடம்பரப் பொருட்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நிம்மதிக்கான வழிபாட்டில் ஈடுபாடு காட்ட முனைவீர்கள், கௌரவமான நாள், அபூர்வ சந்திப்புக்கள் இடம் பெறலாம்.

**கும்பம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும், பெண் வழியில் உதவிகள் கிடைக்கலாம், காரிய அனுகூலமுண்டு.

**மீனம்** புத்திரர்கள் மூலம் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சியுண்டு, பூர்வ புண்ணிய காரியங்களில் நாட்டமுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்தடை அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழமுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம்நகர்த்த வேண்டியிருப்பதாலும் புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள 24 மெகாவோட்ஸ் மின்நிலையத்திற்கு மின் உபகரணங்கள் பொருத்துவதற்காகவும் தொடர்ந்து இருநாட்கள் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இதன்படி இன்று சனிக்கிழமை முற்பகல் 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரையும் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம், கரவெட்டிப் பிரதேசம், சாமியன், அரசடிப் பிரதேசம், கலிகைப் பிரதேசம், யாக்கரு பிரதேசம், நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, மருத்துவபீடப் பிரதேசம், முடமாவடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, பாற்பண்ணை ஆகிய பிரதேசங்களிலும்;

நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8 மணியிலிருந்து நண்பகல் 12 மணி வரையும் புன்னாலைக்கட்டுவன், புத்தூர், ஆவரங்கால், வீரவாணி, வாதரவத்தை, ஊறணி, அச்சுவேலி, வல்லை முதல் மந்திகை வரையான வடமராட்சிப் பிரதேசம், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ்.மாநகர சபைப்பகுதி, ஸ்ரான்லி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், முடமாவடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, பாற்பண்ணைப் பிரதேசம், சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி, சிறுவிளான், பன்னாலை, தெல்லிப்பழை, மாவிட்டபுரம், கீரிமலை ஆகிய இடங்களிலுமே மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-5)




## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(கரவெட்டி)



சாவகச்சேரி பெரிய மாவடியைச் சேர்ந்த செல்வி சுந்தரலிங்கம் சுகன்ஜா யாழ். மாவட்ட சமாதான நீதவானாக சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதிபதி லெனின்குமார் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவியும் கிழக்குப் பல்கலைக் கழக பட்டதாரியுமாவார். கிழக்கு சமூக அபிவிருத்தி, உதவும் கரங்கள், சூரியா பெண்கள் அபிவிருத்தி போன்ற அமைப்புக்களின் உறுப்பினராகவும் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக கலாச்சார பிரிவின் உத்தியோகத்தராகவும் பணிபுரிந்து வருகிறார். (செ-3-24)

## விருது வழங்கலும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

பண்பாட்டு மரபுவளப் பாதுகாப்பு மையம் கடந்த ஆண்டின் இறுதியில் நடத்திய சூழல் பொது அறிவுப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றோருக்கான பசுமை அமைதி விருது வழங்கும் வைபவமும் பரிசளிப்பு நிகழ்வும் நங்கூரம் நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன், சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தொழிலதிபர் இ.ச.பே.நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-5)

## மஹோற்சவம்

(புலோலி)

புலோலி கிழக்கு ஸ்ரீ முதலி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 9 ஆம் நாளாகிய இன்று சனிக்கிழமை இரவு 9 மணிக்கு சப்பறத் திருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மாசி மகத் தீர்த்தமும் நடைபெறும். (செ-2)

## இலவச வைத்திய முகாம் நாளை

(பருத்தித்துறை)

மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினால் இலவச வைத்திய முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பல் வைத்தியம் உட்பட பல துறை வைத்தியங்களும் நடைபெறவுள்ளது. சிகிச்சை பெறவரும் நோயாளர்களுக்கு மருந்து வகைகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளது. (செ-3-10)

## மக்கள் வங்கியினால் பணப்பரிசு வழங்கப்பட்டது

(பருத்தித்துறை)

கடந்த 2012 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையின் முடிவுகளின்படி தேசிய ரீதியில் கணிதப் பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் பாலகோபாலன் கபிலனுக்கு மக்கள் வங்கி பருத்தித்துறை கிளையினால் 50 ஆயிரம் ரூபா பணப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மககள் வங்கியின் கல்வி ஊக்குவிப்பு திட்டத்தின்கீழ் இப்பரிசில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-3-10)

## கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

(மானிப்பாய்)

மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தின் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அண்மையில் மீள்குடியமவர்விற்கு அனுமதிக்கப்பட்ட மாதகல் நுணசை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் அ.ஜெபநேசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக இளைஞர் சேவை அதிகாரி கே.லக்ஷன், தேசிய சம்மேளனப் பிரதிநிதியும் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளன தலைவருமான ச.செந்தில்குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-3-23)


## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பாடசாலையின் அதிபர் சு.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதமவிருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளதோடு,

மாணவர்களிற்கான பரிசில்களை திருமதி நந்தினி உதயகுமார் வழங்கி வைக்கவுள்ளார். (செ-5)




நன்றி: மிரர்

## திருநாள் திருப்பலி நேரடி ஒளிபரப்பு

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் திரு நாள் திருப்பலி இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் யாழ்.சேவையில் நேரடியாக ஒலிபரப்பப்படவுள்ளதாக யாழ்.சேவை அறிவிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இவ் ஒலிபரப்புச் சேவையானது நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் காலை 9.30 மணி வரை (90.1MHz, 102.1MHz) என்ற பண்பலைகளில் ஒலிபரப்பப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-5)


## BID NOTICE

## TEACHING HOSPITAL, JAFFNA

The chairman of the Regional procurement Committee, Teaching Hospital, Jaffna will receive sealed bids from the qualified contactors for the following works.

| Serial No | Work/Service Details | Non-refundable Deposit(Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 01 | Renovation of Skin clinic | 500.00 | 25,000.00 | 60 | 1.3 | C9 |
| 02 | Stainless Steel Curtain pipes Fixing on Ward no 16 A | 500.00 | 9,000.00 | 60 | 0.5 | C9 |
| 03 | Stainless Steel Curtain pipes Fixing on Ward no 16 B | 500.00 | 9,000.00 | 60 | 0.5 | C9 |
| 04 | Stainless Steel Curtain pipes Fixing on Ward no 14 | 500.00 | 9,000.00 | 60 | 0.5 | C9 |
| 05 | Construction of Toilet in Ward no 19 | 500.00 | 12,000.00 | 60 | 0.7 | C9 |
| 06 | Renovation of Hospital Ponnampalam Road Boundary Wall | 500.00 | 9,000.00 | 60 | 0.5 | C9 |

Bid forms may be obtain from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's office, Teaching Hospital, Jaffna till 04/03/2013.

Perfected bid should be sealed and mark with the and the name of the work on the top left corner of the envelop and send by registered post to reach the Director, Teaching Hospital, Jaffna or could be deposited in the bid box kept at Director Office, Teaching Hospital, Jaffna.

Bids will be accept till 10.00 am on 05/03/2013 and open immediately thereafter. Bidders or their authorized representatives could be present at the time of opening of bids.

Bids forms may be inspected by the bidders free of charge at the residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
22/02/2013.

(C-2443)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற காணொளி போலியானது-கோத்தா

சனல் 4 ஊடகத்தின் புதிய காணொளி காட்சிகள் போலியானவை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

பிரித்தானியாவின் சனல்4 ஊடகம் அண்மையில் பிரபாகரனின் இளைய புதல்வர் பாலச்சந்திரனது மரணம் தொடர்பில் சில புகைப்படங்கள் வெளியிட்டிருந்தது. இராணுவப் பதுங்கு குழியில் குறித்த சிறுவன் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக எவ்வாறு சனல் ஊடகம் உறுதியாக கூறுகின்றது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

புகைப்படத்தை வைத்துக் கொண்டு இவ்வாறான தீர்மானங்களை எவ்வாறு எடுப்பது என அவர் கேட்டுள்ளார். சனல் 4 ஊடகத்தினர் புகைப்படங்களை திரிபுபடுத்தி இவ்வாறு குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த புகைப்படத்தை யார் எடுத்தது எனவும் தமிழீழ விடுதலைப்புலிகளினால் சிறுவர், சிறுமியர் தற்கொலைத் தாக்குதல்களுக்கு பயன்பட்டமை குறித்து ஏன் கேள்வி எழுப்பப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் காணப்பட்ட சடலங்கள் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை. போர்ப் பிரதேசங்களில் சில பகுதிகளுக்கு ஒரு சில தினங்களிலும் சில பகுதிகளுக்குச் செல்ல ஒரு மாதம் தேவைப்பட்டது. மேலும் நந்திக்கடல் பிரதேசத்தில் காணப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் பல சடலங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்பட்டது. யுத்தத்தில் உயிரிழந்த மிகவும் தேடப்பட்டு வந்த புலிகளின் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் பொட்டு அம்மானின் சடலம் கிடைக் கவில்லை. இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் சரியான புள்ளி விபர மதீப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு தகவல்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளன.

சிலர் ஒரே குற்றச்சாட்டுக்களை பல்வேறு வழிகளில் பல்வேறு விதமாக சுமத்தி வருகின்றனர்.2009 இற்கு பின்னரும் அதற்கு முன்னரும் அரசாங்கம் ஆற்றி வரும் சேவைகளை மக்கள் அறிந்து கொண்டுள்ளனர்.

2005 தொடக்கம்2009 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சுமார் 6000 படையினர் உயிரைத் தியாகம் செய்தே போரை வென்றுள்ளனர்.

ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரும் தற்போது வீதியில் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழ்நிலை அவர்களால் தான் ஏற்பட்டுள்ளது. சரணடைந்த எந்தவொரு விடுதலைப்புலி உறுப்பினர்களையும் நாம் தண்டிக்கவில்லை. கடற்புலிகளின் தளபதி சூசையின் பிள்ளைகளை இலங்கைக் கடற்படையினர் பராமரித்து கல்வி வழங்கி வருகின்றனர்.

மேலும் கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் ஏற்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து அமெரிக்க தூதுவருக்கு விளக்கம் அளித்ததாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (செ-2)

## சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது ஆண்டு ஜனன விழா

(யாழ்ப்பாணம்)

இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தினால் நடத்தப்படும் சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த ஆண்டு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யா/ மேலைப் புலோலி சைவ பிரகாச வித்தியாசாலையில் அதிபர் பொ. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் எழுந்திரு விழித்துக் கொள் என்னும் வில்லிசை நிகழ்வும் தியாகிகள் படை வேண்டும் என்ற கருப்பொருளிலான கவியரங்கும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சி.சிவ மோகன் வழங்கும் சுவாமி விவேகானந்தர் அழைக்கிறார் என்ற ஆன்மீக உரையும் இடம்பெறவுள்ளது. (செ-5)

# அறிவுறுத்தல்களை வழங்கலாமே தவிர அதிகாரங்களை கையிலெடுக்க முடியாது

## உள்ளூராட்சி அமைச்சுக்கு சீ.வி.கே. கடிதம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி அதிகார சபைகளின் அட்டவணைப்படுத்தப்படாத நியமனங்கள் பற்றி மாகாணசபை அறிவுறுத்தல் செய்யலாமே தவிர அந்த அதிகாரங்களை தாமே எடுத்துக் கொள்ள முடியாது. அப்படி செய்வது பிரதேச சபைகள் மற்றும் நகர சபை கட்டளைச் சட்டத்தினை மீறும் செயலாகும் எனச் சுட்டிக் காட்டி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சீ.வி.கே. சிவஞானம் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்று நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, உள்ளூராட்சி நிறுவனங்களில் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல்.

விடயத்தலைப்பிலானதங்களது08.02.2013 ஆம் தீகதி கடிதம் மற்றும் தங்களுக்கு பிரதியிடப்பட்ட (NP/14/01/Cadre என்னும் இலக்கம் கொண்ட வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரது 07.02.2013 ஆம் திகதிய கடிதம் தொடர்பாக வடமாகாணத்தின் ஆறு உள்ளூராட்சி மன்றங்கள் தவிர்ந்த ஏனைய உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்திற்கு பொறுப்பான அரசியல் கூட்டமைப்பு கட்சி என்ற வகையில் சில முக்கிய விடயங்களில் எழுந்துள்ள முரண்பாடுகள் பற்றி சுட்டிக்காட்டி அவற்றிற்கான தெளிவுபடுத்தல்களையும் தீர்வையும் நோக்கமாகக் கொண்டு இக்கடிதம் எழுதப்படுகின்றது.

முக்கியமாக பின்வரும் இரண்டு விடயங்களுக்கு தங்கள் அவதானம் கோரப்படுகின்றது. அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கான கல்வித் தகைமைகள், தெரிவு செய்யப்பட்ட சபைகளைப் புறந்தள்ளிவிட்டு அச்சபைகளின் செயலாளர்களூடாக நியமனங்களை மேற்கொள்ள எடுக்கப்படும் நடவடிக்கை.

அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளுக்கான கல்வித் தகைமைகளை பொறுத்த வரை இணைப்பு I,II,III ஆகியவற்றின் கீழுள்ள சகல பதவிகளுக்குமான கல்வித் தகைமை. கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ் அல்லது சிங்களம் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தப் பதவிகளுக்கு அடிப்படைத் தகைமையாக தரம் 8 சித்தியடைந் திருத்தால்,போதும் என பின்வரும் ஆவணங்களில் மிகத் தெளிவாக கூறப்பட்டிருக்கின்றது.

உள்ளூராட்சிக்கோவை ஆணைக்குழு செயலாளரது 20.01.1986 ஆம் திகதிய 01/1986 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை, பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரது 06/2006 இலக்கம் கொண்ட 25.04. 2006 ஆம் திகதிய சுற்றறிக்கை இணைப்பு.

எனவே, உள்ளூராட்சி அதிகார சபைகளின் அட்டவணைப் படுத்தப்படாத நியமனங்கள் பற்றி மாகாண சபை அறிவுறுத்தல் செய்யலாமே தவிர அந்த அதிகாரங்களை தாமே எடுத்துக் கொள்ள முடியாது. அப்படிச் செய்வது பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 19 (2) ஐயும் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 36 (அ) பிரிவை மீறும் செயலாகவே அமையும்.

எனவே, மேற்குறிப்பிட்ட இந்த விடயத்தை உடனடியாக மீளாய்வு செய்யுமாறு கோருகின்றோம் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தின் பிரதிகள் வடமாகாண பிரதம செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (செ-6)


சரவணை பள்ளம்புலம்
அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோயில்

## 'பிள்ளைத் தமிழ்'

நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ்

இடம் : அத்தியடி கணபதி கலாசார மண்டபம்
காலம் : 24.02.2013 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30
பாடியவர் : தீவகம் வே.இராசலிங்கம் (கனடா)
(குமரகோட்டன்)

பிரதம விருந்தினர்: பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், வாழ் நாள் பேராசிரியர்)

ஆய்வுரை : கலாநிதி செ.திருநாவுக்கரசு
(ஓய்வு பெற்ற விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

பிள்ளைத் தமிழ் ஓதல்:
இசைக் கலைமானி செல்வி.வெ.விஜயபாரதி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறங்காவற் சபை



இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>உயரம்: 5'7"<br>கி.பா: 50, 4இல் செவ்<br>தகைமை/தொழில்: பல் வைத்தியர் BDS (Peradeniya)<br>தொ.இ: B -1254 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>உயரம்: 5'<br>கி.பா: 20.25, 4 இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L, HNDA<br>தொ.இ: G -1272 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4, 7இல் செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>மலேசியா<br>தொ.இ: B -1257 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>உயரம்: 5'1"<br>கி.பா: 54<br>தகைமை/ தொழில்: Pharmacist in UK (UKPR)<br>தொ.இ: G-1273 |
| பிறப்பு: 1974 றோ.க<br>உயரம்: 5'5"<br>தகைமை/ தொழில்: A/L, Diploma<br>ஆலோசகர் (சிறுசர் பாதுகாப்பு ஸ்தாபனம்)<br>எ.பா: கணவனை இழந்தவர் ஏற்கப்படும்<br>தொ.இ: B -1259 | பிறப்பு: 1978 இந்து வேளாவர்<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>உயரம்: 5'3"<br>தகைமை/ தொழில்: A/L நூலகர் Diploma in Library Science<br>தொ.இ: G-1274 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி , 7 இல் செவ்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L, அரச உத்தியோகம்<br>தொ.இ: B -1264 | பிறப்பு: 1983 றோ.க<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1277 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சளவில் மட்டும் சமவுரிமையை வைத்து எட்டப்படுமா இலக்கு?

இலங்கையில் தமிழ்- சிங்கள இனங்களுக்கிடையில் சமூக ஒருமைப்பாடு என்பது எட்டப்படாத இலக்காகவே தற்பொழுதும் இருந்து வருகிறது என்பதை யாழ்ப்பாணத்





திஸ்ஸ விதாரண


வாசுதேவ நாணயக்கார

தில் வைத்து அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறியிருந்தார்.

லங்கா சமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளைக் காரியாலயம் கடந்த 16 ஆம் திகதி கண்டி வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் மேற்கண்டவாறு கூறியிருந்தார். அதுமட்டுமின்றி தமிழர்களுக்கு சமவுரிமை வழங்க பெரும்பான்மையினத்தவர்களான சிங்களவர்கள் முன்வர வேண்டும் என்பதையும் சமூக ஒருமைப்பாடு தமிழர்களுக்கு அவசியமானது என்பதையும் வலியுறுத்தியிருந்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவையில் தமிழர்களுக்கு சமவுரிமை வழங்கப்படவேண்டும் என்று வெளிப்படையாக கூறும் தைரியம் உடையவர்களும் உள்ளனர் என்பதை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வெளிப்படுத்தியிருந்தார்.

சகல இன மக்களும் சமவுரிமையுடன் வாழ வேண்டும். அதற்கு எமது கட்சி ஆட்சிக்கு வர வேண்டும் எனக்கூறி தேர்தல் காலங்களில் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக பொய்ப் பிரசாரத்தில் ஈடுபடும் அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வந்த பின்பு அதனை மறந்து விடுவதும் மக்களின் நலனை விட தமது குடும்பத்தினரின் நலனிலும் தமது கட்சிக்காரரின் நலனிலும் அதிக அக்கறை காட்டுவதும் இயல்பானதே.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதை தமிழர் பகுதிகளில் இடம்பெறும் சம்பவங்களும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வினை வழங்குவது தொடர்பில் ஏற்பட்டுள்ள இழுபறியும் காலதாமதமும் வெளிப்படையாக உணர்த்தி நிற்கிறது.

இந்நிலையில் பேச்சளவிலேதான் சமவுரிமையும் இனங்களுக்கிடையிலான ஒருமைப்பாடும் சுதந்திரமும் சமாதானமும் இந்த நாட்டிலுள்ளது என்பதை அமைச்சர் ஒருவர் வெளிப்படையாக கூறியிருந்தார்.

பிளவுபட்ட இரண்டு இனங்களுக்கிடையிலும் சமூக ஒருமைப்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும். அதன் ஊடாகவே நிரந்தர சமாதானம் உருவாகும். சுதந்திரமும் பாதுகாக்கப்படும் என்பதையும் வலியுறுத்திய அமைச்சர் வாசுதேவ சிங்கள மக்களுக்கு இனங்களுக்கிடையில் ஒருமைப்பாடு ஏற்பட்டாலும் ஒன்றுதான் ஏற்படாமல் விட்டாலும் ஒன்றுதான். காரணம் அவர்களுக்கு கிடைக்க வேண்டியது எல்லாம் கிடைக்கிறது.

ஆனால், தமிழர்களுக்குத்தான் ஒருமைப்பாடு மிகவும் அவசியமானது என்பதையும்

> **அரச பதவி வகிப்பவர்களுக்கு ஏற்படும் அவதிகளை தனிச் சிங்களத்தில் சுற்றுநிருபத்தை அனுப்புபவர்கள் அறிவ தற்கு வாய்ப்பில்லை. வட பகுதியிலிருந்து தென்பகுதிக்கு தனித் தமிழில் சுற்றுநிருபம் அனுப்பப்படுமானால் அந்த நிலையை அனுபவிக்க அங்குள்ளவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.**

கூறி தமிழர்களுக்கு சமவுரிமையும் கிடைக்கவில்லை. உதவிகளும் கிடைக்கவில்லை. பாதிப்புக்களை அதிகளவில் தமிழர்கள் எதிர்கொள்கின்றனர் என்பதைக் கூறாமல் கூறிவிட்டார்.

சிங்கள மக்கள் தமிழர்களுக்கு சமவுரிமை வழங்குவதற்கு முன்வர வேண்டும். இன ஒருமைப்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதை சிங்களவர்களிடமும் அமைச்சர் வாசுதேவ கூற வேண்டும். அதனைத் தமிழர்களிடம் கூறுவதனால் பலன் ஏதும் இல்லை. தமிழர்கள் சமூக ஒருமைப்பாட்டுக்கு தடையாக இருந்த சந்தர்ப்பங்களை விட சிங்களவர்கள் தடையாக இருந்த சந்தர்ப்பங்களே அதிகம் என்பதையும் புரிந்து செயற்பட வேண்டும்.

இடதுசாரிகளின் பலத்தை வடக்கில் அதிகரிக்கும் நோக்குடன் வெறும் பேச்சளவில் நின்று விடாது தனது அமைச்சுக்குரிய தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டை நாட்டில் வலுப்பெற செய்ய வேண்டும். தமிழர்களுக்கு இனிமேலாவது சமவுரிமையும் தீர்வும் வழங்க இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும்.

தனிச் சிங்கள மொழிச் சட்டம் மட்டும் தமிழர்களுக்கு உரிமை வழங்க தடையாகவில்லை. இலங்கையில் பல தடைகள் உள்ளன. அவற்றினை தகர்த்து தமிழர்களுக்கு சமவுரிமையும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு போலியற்ற உதவிகளும் வழங்கப்பட வேண்டும். இனங்களுக்கிடையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு அமைச்சரவையில் தடையாக விமல் வீரவன்ச, சம்பிக்க


சம்பிக்க ரணவக்க


விமல் வீரவன்ச

ரணவக்க போன்ற அமைச்சர்களும் உள்ளனர் என்பதை மறந்து இன ஒருமைப்பாட்டை ஏற் படுத்த அமைச்சர் திஸ்ஸ விதாரண, டியூ. குணசேகர போன்றவர்களுடன் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றபோதும் மொழிப் பிரச்சினையை தீர்ப்பதற்கு எடுத்த முயற்சிகள் பூச்சியத்தில்தான் இந்த நாட்டில் உள்ளன. இதற்கிடையில் சமூக ஒருமைப்பாடு எட்டப்படும் இலக்காக தென்படவில்லை. அரச சுற்றுநிருபக் கடிதங்கள், அறிவித்தல் கடிதங்களில் தமிழ் மொழியை புறக்கணித்து தனிச் சிங்களச் சட்டத்தை அமுல்படுத்துவதாகவே அனுப்பப்படுகிறது.

கடந்த கால யுத்த அழிவுகளைக் காரணம் காட்டி அரச பதவி வகிப்பவர்களுக்கு ஏற்படும் அவதிகளை தனிச் சிங்களத்தில் சுற்றுநிருபத்தை அனுப்புபவர்கள் அறிவதற்கு வாய்ப்பில்லை.

வட பகுதியிலிருந்து தென்பகுதிக்கு தனித் தமிழில் சுற்று நிருபம் அனுப்பப்படுமானால் அந்த நிலையை அனுபவிக்க அங்குள்ளவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். இதனை விட தென்னிலங்கையில் நடைபெறும் செயலமர்வுகளில் வடபகுதியிலிருந்து சென்று பங்கு பெறுபவர்களின் நிலை இதைவிட மோசமானது. ஊமைப்படம் பார்த்தது போல அவர்களின் நிலை. இவற்றையெல்லாம் அரச அதிகாரிகள் பொறுத்துத்தான் ஆக வேண்டும். காரணம் அரசாங்க உத்தியோகம் பார்ப்பவர்கள், அரச ஊதியம் பெறுபவர்கள். ஆனால், புரியாத மொழியில் பேசினாலே பொருள் விளங்கிக் கொள்வது இயலாத நிலையில் அந்த மொழியில் கீதம் வேறு இசைக்கப்படுகிறது. நானூறு பேர் பங்கு கொள்ளும் நிகழ்வில் நான்கு சிங்களவர்களுக்காக மிகுதியானவர்களையும் அவர்களது மொழியுரிமையையும் பறிக்கும் வகையில் தேசிய கீதம் சிங்களத்தில் இசைக்கப்படுவது தமிழர்களின் பிரதேசத்தில் தொடர்கிறது. இன்னும் பல பிரச்சினைகள் தமிழர்களுக்கு தீர்க்கப்படாத, கிடைக்காத தீர்வாகவே தொடர்கிறது என்பதையும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் உணர்ந்து இனங்களுக்கிடையிலான சமூக ஒருமைப்பாட்டை விரைவில் எட்ட வழி செய்ய வேண்டும்.

தொகுப்பு:-எஸ்.ஆர்.கரன்

## கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா

### 4000 இந்திய யாத்திரிகர்கள் கலந்து கொள்கின்றனர்

(கொழும்பு)

வரலாற்று சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவில் இம்முறை சுமார் நான்காயிரம் இந்திய யாத்திரிகர்கள் கலந்து கொள்வார்கள் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

கச்சதீவு புதிய அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமையும் நாளை மறுதினம் திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளது. இதற்கமைய இந்தியாவைச் சேர்ந்த யாத்திரிகர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை கச்சதீவு வந்தடையவுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை காலை நடைபெறவுள்ள திருவிழா திருப்பலியை அடுத்து அவர்கள் மீண்டும் நாடு திரும்புவார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதேவேளை, நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் வடமாகாணத்திற்கான இரண்டு நாட்கள் விஜயத்தை மேற்கொள்ளும் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா கச்சதீவுக்கு செல்லவுள்ளார்.

இதனைத் தவிர யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்வுகளில் அவர் கலந்து கொள்வார் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. (செ-2)

## 24 மணிநேர வைத்திய சேவையில் மருதங்கேணி வைத்தியசாலை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கின் மருதங்கேணி வைத்தியசாலை 24 மணிநேர வைத்திய சேவை இடம்பெற்றுவருவதாக வைத்தியர் தா. உமாபதி சிவம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், மருதங்கேணி வைத்தியசாலையில் தற்போது நோயாளர்களை தங்க வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தம்மால் சிகிச்சை அளிக்க முடியாத நோயாளர்களை வைத்தியசாலையின் நோயாளர் காவு வண்டி மூலம் மேலதிக சிகிச்சைக்காக மந்திகை மற்றும் சாவகச்சேரி வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனைவிட வாரந்தோறும் வருகின்ற செவ்வாய்க்கிழமைகளில் பொதுவைத்திய நிபுணரின் வைத்திய ஆலோசனையும் சிகிச்சையும் இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

மேலும் ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் மருதங்கேணி வைத்தியசாலையில் நடமாடும் பற்சிகிச்சை இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

(செ-3-64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவான நிலையில் போர்க்குற்ற ஆதாரங்கள்; தப்பிப்பாரா மஹிந்த? -தினமணி

(டில்லி)

**இலங்கைக்கெதிரான போர்க்குற்ற ஆதாரங்கள் பாலகன் பாலச்சந்திரன் படுகொலையுடன் வலுப்பெற்றுள்ள நிலையில் இந்தியா, இலங்கை அரசு மீது இனி எவ்வித தயக்கமும் காட்ட முயற்சிக்கக்கூடாது என இந்திய நாளேடான தினமணி தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.**

அவ் ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ள ஆவணப்படங்கள் சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி அவை பத்திரிகைகளிலும் பிரசுரமாகி உலகமெங்கும் தமிழர் மனங்களில் அதிர்ச்சி வேதனை,கோபம் என உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பன்னிரண்டு வயதுச் சிறுவன் கைதொடும் தொலைவில் துப்பாக்கியால் சுடப்படுவதை, தாக்குதலுக்கிடையே சிக்கி இறந்ததாக யாராலும் சொல்ல முடியாது. ஆனாலும் இலங்கை அரசு இதை மறுக்கிறது.

இலங்கை அரசின் இந்தியத் தூதரக அதிகாரி காரியவசம் இந்தப் படங்கள் கணனித் திரிபு படங்கள் என்கிறார். இந்தப் பிரச்சினையில் சர்வதேச விசாரணை தேவையில்லை என்று கூறிய அவர் பாலச்சந்திரனை இலங்கை இராணுவம் கொல்லவில்லை என்றும் சொல்கிறார்.

என்னதான் சொல்ல வருகிறார் இலங்கைத் தூதர் காரியவசம். உலக அனுதாபம் பெறுவதற்காக விடுதலைப் புலிகளே பாலச்சந்திரனைக் கொன்றிருக்கலாம் என்று சொல்கிறாரா? அது நம்பும்படியாகவா இருக்கிறது.

இலங்கையின் கொலைக்களம் எனும் ஆவணப்படத்தில் இடம்பெற்றுள்ள இந்தக் காட்சிகள் குறித்த தடயவியல் ஆய்வுகள் சொல்லும் உண்மை இவை. கணனிதிரிபு படங்கள் அல்ல. இவை ஒரே கமராவில் எடுக்கப்பட்டவை என்பதுதான்.

அம்பலம் ஏறியுள்ள இந்த ஆவணத்தை விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் கொல்லப்பட்டார் என்பதைக் கடந்து இலங்கை இராணுவத்திடம் சிக்கிய சிறுவர்களும் பெண்களும் இவ்வாறுதான் கொல்லப்பட்டார்கள் என்பதற்கான போர்க்குற்ற ஆவணமாகத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இலங்கை இராணுவம் தனது கடைசி கட்டப் போரில் வெற்றியைத் தொட்டுவிட்ட மமதையுடன் எந்த வரையறையும் கட்டுப்பாடும் இல்லாமல் வெறித்தனமாகச் செயற்பட்டுள்ளது என்பதற்கான சாட்சியமாக இது பார்க்கப்பட வேண்டும்.

விடுதலைப்புலிகள் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்துகிறார்கள் என்று காரணம் கூறிக்கொண்டு ஒட்டுமொத்தமாக அனைவரின் மீதும் தாக்குதல் நடத்திய இலங்கை இராணுவத்தின் வெறியினால்தான் குழந்தைகளும் பெண்களும் மிக அதிக எண்ணிக்கையில் இறந்தனர். இலங்கை அரசின் பாஷையில் சொல்வதாக இருந்தால் காணாமல் போயினர்.

அப்பட்டமான போர்க் குற்றத்தின் சாட்சியாக பாலச்சந்திரன் கொல்லப்பட்ட நிழற்பட ஆவணங்கள் அமைந்துள்ளன. இலங்கையின் கடைசி நேர அழித்தொழிப்புப் போரின் அத்துமீறல்கள்குறித்துமுழுவிசாரணை நடத்திடவும் இத்தகைய போர்க் குற்றங்களுக்குக் காரணமானவர்களைத் தண்டிக்கவும் வேண்டும் என்பதே அனைவரின் குரலாக இருக்கிறது.

இந்த ஆவணப்படத்தைக் கண்ட தமிழ் நாட்டின் பல அரசியல் தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர். தமிழக முதல்வர் ஜெயலலிதா இலங்கையில் நடப்பது ஹிட்லர் ஆட்சி என்று கடுமையாகக் கூறியுள்ளார்.

தி.மு.க தலைவர் கருணாநிதியும் ஐ.நா. மனிதவுரிமை குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா மீண்டும் கொண்டுவர இருக்கும் கண்டனத் தீர்மானத்தின் போது இலங்கையை இந்தியா காப்பாற்ற முயலக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்தக் போர்க் குற்றம் குறித்து இந்திய அரசின் கருத்து என்ன என்பது பற்றி இது வரை மத்திய அரசு கருத்துத் தெரிவிக்கவில்லை.

ஈரானிலும் ஆப்கானிஸ்தானிலும் சொல்லிடங்கா போர்க் குற்றங்கள் செய்த அமெரிக்காவே இலங்கை அரசின் போர்க்குற்றத்துக்காக ஐ.நாவில் தீர்மானம் கொண்டு வரும் என்றால் ஏன் இத்தீர்மானத்தை எந்தப் போர்க்குற்றமும் செய்யாத இந்தியாவே கொண்டு வரக்கூடாது. இலங்கைத் தமிழர்களைக் காக்கும் பொறுப்பு இந்தியாவுக்கு இல்லையா?

இலங்கையில் குறிப்பாக வட இலங்கையில் மறு நிர்மாணப் பணிக்காக பல நூறு கோடி ரூபாய் நிதியுதவி செய்வதோடு இந்தியாவின் கடமை முடிந்து விடாது போர் ஓய்ந்த நிலையிலும் தமிழர்கள் வீடுகள் இல்லாமல் பாடசாலைகளும் ஆசிரியர்களும்இல்லாமல் மருத்துவர்களும் மருத்துவமனைகளும் இல்லாமல் வடகிழக்கு மாகாணத்தில் இப்போதும் வேதனை தொடர வாழ்கிறார்கள்.

தமிழர் மாகாணங்களுக்கு தன்னாட்சி வழங்க முடியாது என்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிப்படையாக அறிவித்து விட்டார். அத்தோடு தமிழர் ஆட்சியும் தமிழர் அரசியலுக்கு கூட இல்லாமல் செய்யும் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.தமிழர்கள்வாழும் பகுதியிலும் சிங்களவர்களை குடியேற்றி எல்லாப் பகுதியிலும் அவர்கள் சிறுபான்மையினராக இருப்பது உறுதி செய்யப்படுகிறது.

வடகிழக்கு மாகாணத்தில் தமிழர் மட்டுமே இருப்பதால் தமிழ் எம்.பிக்கள் தெரிவாகிறார்கள். இந்த நிலைமையைத் தகர்க்க சிங்களவர்களைக் குடியேற்றி தமிழர் வாக்கு வங்கியை உடைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது இலங்கை அரசு. ஊர்களின் தமிழ்ப் பெயர்களை சிங்களத்துக்கு மாற்றி சிங்களவர் குடியேற ஊக்கப்படுத்துகின்றது. அடுத்த பத்தாண்டுகளில் வடகிழக்கு மாகாணத்தில் தேர்வு செய்யப்படும் எம்பிக்கள், தமிழர்கள் பாதியாகக் குறைந்து போவார்கள் .

அரசியல் பங்களிப்பிலும் தமிழர்கள் இல்லாமல் ஒடுக்குவதுடன் நின்றுவிடாமல் தமிழர்களை வெறும் மொழிச் சிறுபான்மையினராக மாற்றும் பணியில் ராஜபக்ஷ அரசு முனைப்புடன் செயற்படுகிறது.

ஒட்டுமொத்த தமிழகத்தின் உலகளாவியதமிழர்களின்கோரிக்கையை மன்மோகன் சிங் அரசு ஏற்று செயற்படப் போகிறா? இல்லை போர்க் குற்றவாளியாக உலகமே கருதும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாவலர்களாக இருந்து அவரை காப்பாற்றப் போகிறதா என்பதுதான் கேள்வி. இத்தனை ஆதாரங்கள் கிடைத்த பின்பும் இனியும் ஏன் தயக்கம் என தினமணி ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

## யுனிசெப் பிரதிநிதிகளுடன் ஆளுநர் கலந்துரையாடல்



யுனிசெவ் நிறுவனத்தினால் வடமாகாணத்தில் இவ்வாண்டு முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ சந்திரசிறி தலைமையில் கலந்து கொண்ட பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், வட மாகாண அமைச்சுக் களின் செயலாளர்கள் ஆகியோரும் யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக் கான பிரதிநிதி றேசா கொசெல்னி, யுனிசெவ் நிறுவன நீர், கழிவகற்றல் மற்றும் சுகாதார நிகழ்ச்சித்திட்ட பிரதம அதிகாரி கலாநிதி அட்டுளாய்கைகாய் ஆகியோர் உள்ளிட்ட குழுவினரும் கலந்து கொண் டனர்.

யுனிசெவ் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இச்சந்திப்பில் இவ்வாண்டு யுனிசெவ் நிறுவனம் மேற்கொள்ளும் செயற்றிட்டங்கள் துறை ரீதியாக ஆராயப்பட்டதுடன் விசேடமாக கல்வி மற்றும் உள்ளூராட்சி அமைச்சு க்களின் செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. (செ-5)

## போதைப் பொருள் கடத்திய இருவர் கைது

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறைக்கு வடக்கு கடலில் வைத்து பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்குணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

புகையிலை கொண்டு தயாரிக்கப்படும் போதைப்பொருள் 123 கிலோகிராம் இவர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைக்கென பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-2)

## கௌரவிப்பு நிகழ்வு

(கிளிநொச்சி)

முழங்காவில் கிராம அலுவலராக சேவையாற்றிய திருமதி நடேசமூர்த்தி வாசுகியின் சமூக சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு முழங்காவில் கிருஸ்ணர் ஆலய மண்டபத்தில் ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. (செ-3)

## ஆக்கக்கண்காட்சியும் அறிவூட்டல் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி உள நல சேவைகள் பெறுவோரினால் நடத்தப்படும் மனத்திடம் ஆக்கக் கண்காட்சியும் அறிவூட்டல் நிகழ்வும் இன்று சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (செ-5)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## நாம் பகைவர்களையும் அன்பு செய்ய வேண்டும்



இயேசு வழங்கிய போதனைகளில் மிக முக்கியமான ஒன்று அன்புக்கட்டளை ஆகும். எல்லா மனிதரையும் அன்பு செய்யக் கேட்ட இயேசு நம் பகைவரையும் நாம் அன்பு செய்திட வேண்டும் என அறிவுறுத்துகிறார். நடை முறை வாழ்க்கையில் இது எவ்வாறு செயற்படும் என்பதைக் காட்ட இயேசு பிறர் உங்களுக்கு என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் என்று கூறினார்.

நம்மிடம் இருக்கின்ற பொருட்களை மட்டுமல்ல நம் நேரத்தையும் திறமைகளையும் நாம் பிறருக்கு உதவி செய்வதில் செலவிடும் போது நாம் தாராள உள்ளத்தோடு செயற்படுகிறோம் எனலாம். நாம் அளந்தளிப்பது பிறருக்கு தாராளமாக சென்று சேர வேண்டும் என்றால் நம் உள்ளம் அன்புணர்வினால் நிறைய வேண்டும். கடவுள் நம் மட்டில்காட்டிய தாராளத்தை நாம் பிறர் மட்டிலும் காட்ட வேண்டும்.

எனவே உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவராய் இருங்கள் என இயேசு கூறுகின்றார். இயேசு வழங்கும் அறிவுரையின் அடிப்படையில்நம் உள்ளத்திலும் வாழ்விலும் இரக்கம் என்னும் நற்பண்பு மேலோங்கி விளங்கிட நாம் முயன்றிட வேண்டும்.இரக்கம் தான் இன்று நற்செய்தியை புரிந்து கொள்வதற்கு நமக்கு உறுதுணை. அன்பு தான் மற்றவர்களின் இதயத்திற்குள் நாம் நுழைய முதல் கதவு .அவர்கள் அந்த கதவை மூடினால் நாங்கள் இரக்கம் என்னும் பின் கதவுமூலமாக செல்லலாம். நாம் அவர்களிடம் அன்பினை கொடுத் தால் கடவுளைக் கொடுக்கிறோம். நாம் தொடர்ந்து அன்பு செய்து கொண்டே இருந்தால் நாம் கடவுளையும் அவரது குணப்படுத்தலையும் பெறுவோம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க
சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# அம்புலிமாமா கதைகள்

## உதிர்ந்த மலர்



ராணா பிரதாப்சிங் அக்பருடைய பரம விரோதி. நாடு, நகரம், வீடு, வாசல் எல்லாம் இழந்தும்கூட ராணா அக்பருக்குக் கப்பம் கட்டிக்கொண்டு அடிமையாக இருக்கவிரும்பவில்லை. அடிக்கடி முகலாய சைன்யத்துடன் சண்டையிட்டு அவர்களைக்கொன்று குவித்து வந்தான்.

ராணா பிரதாப் அரவல்லி மலைக்காடுகளில் தன் குடும்பத்தோடு வசித்துக்கொண்டே முகலாயர்களுடன் சண்டை செய்யலானான். இந்தச் சமயத்தில் அவன் தான் கஷ்டப்படுவதைப் பற்றிக் கூட அவ்வளவாகக் கவலைப்படவில்லை. தன்னுடைய மனைவியும் குழந்தைகளும் கஷ்டப்படுவதைக் காணத்தான் சகிக்கமுடியவில்லை.

சில சமயங்களில் மனம் ஒடிந்து அக்பருடன் சமாதானம் செய்துகொண்டுவிடலாமா என்று அவன் நினைத்ததுகூட உண்டு. ஆனால் மறுநிமிடமே அவனது மனம் மாறி தன்னுடைய நாடு சுதந்திரம் அடைந்தே தீரவேண்டும் என்று திட வைக்ராக்கியம் கொள்ளலானான்.

அவன் மனைவி கருணாம்பாளும் பெண் சம்பாவதியும் மகன் சுந்தரசிங்கும் சுதந்திரமாக வாழ்வதையே விரும்பினார்கள். இதற்கு முன்பும் பிரதாப்சிங்கின் குடும்பம் இவ்வாழ்வில் அவதிப்பட்டது. பிரதாப் தன் மகன் அக்ஷயனையும் மகள் சுவர்ணாவையும் கோரப்பட்டினிக்கு பலி கொடுத்துவிட்டான். அப்போது எல்லாம் மனம் தளரவில்லை.

ஆனால் அன்று அவன் முகம் மிகவும் வாட்டமுற்றிருந்தது. ஏனெனில் ஒரு பிராமணர் அவன் வீட்டிற்கு விருந்தாளியாக வந்துவிட்டார். அவருக்கு உணவு கொடுத்தாகவேண்டுமே? என்ன செய்வது? சுகுணா இப்படி நான் ஒரு தடவைகூட அவமானப்பட்டது இல்லை. ராணாவின் வீட்டிற்கு ஒரு பிராமணர் வந்து சாப்பிடக் கூடமுடியாமல் திரும்பிப் போவது நம் குலத்திற்கே பெருத்த அவமானம். இதற்கு என்னசெய்வது? என்று கேட்டான் பிரதாப் சிங்.

நம்குழந்தைகள் பட்டினியால் இறந்தபோதுகூட நான் இவ்வளவு துக்கப்படவில்லை. நாமாவது ஒன்றும் சாப்பிடாமல் ஒரு சில நாட்களைக் கழித்துவிடலாம். ஆனால் வந்திருக்கும் விருந்தாளிக்கு என்னவழி?



இப்போதே இரண்டு நாட்களாக நாமிருவரும் ஒன்றும் சாப்பிடவில்லை. ஏதோ குழந்தைகளுக்கு மட்டும் சாப்பிட சில ரொட்டிகளை செய்து கொடுக்கமுடிந்ததே என்றாள் சுகுணாம்பாள்.

தன் தாயும் தந்தையும் பேசிக்கொண்டிருப்பதை வெளியிலிருந்தே சம்பாவதி கேட்டுவிட்டாள். அவளும் இரண்டு நாட்களாக ஒன்றும் சாப்பிடவில்லை. தாயார் கொடுத்த ரொட்டிகளை ஓரிடத்தில் மறைத்து வைத்திருந்தாள். அவைகளை இப்போது வந்த விருந்தாளிக்குக் கொடுத்துவிடுவது என்று நிச்சயித்துக் கொண்டாள்.

சற்றுநேரம் கழித்து வீட்டிற்குள் நுழைந்த சம்பாவதி அப்பா நீங்கள் கவலைப்படவேண்டாம். அந்த பிராமணரைக் குளித்துவிட்டு வரும்படி சொல்லியிருக்கிறேன். அதற்குள் அந்தக் கீரையை மசித்துவிடலாம். இரண்டுநாட்களாக அம்மா எனக்குக்கொடுத்த ரொட்டி என்னிடம் இருக்கிறது. அவைகளை அந்த பிராமணருக்குக்கொடுக்கலாம் என்றாள். ராணாவும் சுகுணாம்பாளும் அவளைக் கட்டித் தழுவிக்கொண்டனர். தன் மானத்தை தன் புத்திரி காத்தாளே என்பது பற்றி ராணாவுக்கு ஒரே மகிழ்ச்சி. ஆனால் அவள் பட்டினி கிடந்து வருகிறாளே என்ற வருத்தம் அவனைச் சித்திரவதை செய்தது.

பிராமணர் வந்தார். ரொட்டியையும் கீரையையும் வெகுவாக ரசித்துக் கொண்டே சாப்பிட்டார். தனக்கு ரொட்டி கொடுத்த சம்பாவதியை வாழ்த்திவிட்டு விடை பெற்றுக் கொண்டு அவர் போனார். பசியின் வேகம் சம்பாவதியை பாதிக்கச் செய்தது. அந்த பிராமணர் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் சுருண்டு மயங்கிக் கீழே விழுந்தாள்.

ஐயோ என்று பதறிக்கொண்டே ஓடிவந்த ராணா தன் மகளைத் தூக்கி மடியில் எடுத்துவைத்துக் கொண்டு தன் மனைவியைப் பார்த்து சுகுணா என்னால் இந்தக்கோரத்தைக் காணமுடியவே இல்லை. நேற்றுக்கூட அக்பர் சமாதானத்திற்காக ஆளை அனுப்பி இருந்தான். நான் இன்னும் ஒரு பதிலும் சொல்லவில்லை. இந்தத் தொல்லையெல்லாம் ஒழியப் பேசாமல் சமாதானம் செய்து கொண்டு



விட்டாலென்ன? என்று கேட்டான் ராணா பிரதாப் தன் மனைவியைப் பார்த்து.


மயங்கி விழுந்து கிடந்த சம்பாவதி மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள். அவளால் சரியாக உட்காரக் கூட முடியவில்லை. பசியினால் அவ்வளவு சோர்ந்து போய்விட்டாள். ஆனாலும் தன் தந்தையைப் பார்த்து அப்பா வேண்டாம். இந்த அற்ப சுகத்திற்காகப் பொன்னான சுதந்திரத்தை இழக்கவேண்டாம். அக்பருடன் சமாதானம் செய்து கொண்டு முகலாய தர்பாரில் அடிமைப் பட்டுக் கிடப்பதைவிட பட்டினி கிடந்து இந்த மாதிரி காடுகளில் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருப்பதே மேல்! நாம் அக்பருப்புச் சற்றும் [illegible] இல்லை. ஹல்திகாட் யுத்தத்தில் அக்பர் நம் படையின் வீரத்தை அறிந்திருக்கிறான். சமாதானம் என்று ஆசை வார்த்தை காட்டுகிறான். நீங்கள் அந்தப் பசப்பு வார்த்தைகளில் ஏமார்ந்து விடவேண்டாம் என்று கூறினாள்.

ராணா பிரதாப் சிங் மனஉறுதி பெற்றவனாக சம்பா என் கண்ணே கொஞ்சமும் நீ கவலைப்படாதே! அப்படியெல்லாம் நான் ஒன்றும் செய்யமாட்டேன். நீ படும் அவஸ்தையைக் காண என்னால் சகிக்க முடியவில்லை. ஆமாம் அக்பருக்கு நான் என்றுமே அடங்கி இருக்க மாட்டேன்.

அப்பா என்று சந்தோசத்தில் சம்பா கத்தினாள். அவ்வளவுதான் அவள் முகத்தில் ஒரு புன்னகை பூக்க அந்த நிமிடமே அவளது ஆவி உடலை விட்டுப் பிரிந்தது.

ஐயோ மகளே! என ராணாவும் சுகுணாவும் தரையில் விழுந்து புரண்டு கதறினர். உன் உயிரைக் காப்பாற்ற முடியாத பாவியாகிப் போனேனே! உன்னைப் பட்டினியால் சாகும்படி விட்டுவிட் டேனே! என் கொள்கை மற்றும் சுதந்திரத்திற்காக உன்னைப் பலிகொடுத்தேனே என்று ராணா அலறினார்.

இந்தச் சமயத்தில் யாரோ அங்கு வரும் சத்தம் கேட்டது. பிரதாப் சிங் திரும்பிப் பார்த்தான். சற்று முன் வந்துசாப்பிட்ட பிராமணரைப் பார்த்தான். அந்த பிராமணரும் இறந்து கிடந்த சம்பாவதியைக் கண்டு பிரதாப் என்னை மன்னித்துவிட்டதாக ஒரு வார்த்தை சொல். இந்த மொட்டு கருகியதற்கு நான்தான் காரணம். இந்தப் பாவிக்கு எங்குமே மன்னிப்புக்கிடையாது. ஒரு உயிரைப் பலி வாங்கிவிட்டேனே நான். நான்தான் உன் பரமவிரோதி அக்பர். இன்றுமுதல் நம்மிடையே இருக்கும் விரோதம் ஒழிந்துவிட்டது.




நீ தாராளமாக நாட்டை ஆண்டு கொண்டிரு. உன் சுதந்திரத்தில் நான் தலையிடமாட்டேன் என்று கூறினார். பிராமண வேடத்திலிருந்த அக்பர் அப்படியே ராணா பிரதாபைக் கட்டித் தழுவிக்கொண்டார். இருவர் கண்களிலிருந்தும் கண்ணீர்த்துளிகள் தெறித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 54 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



சின்னப்பாண்டியும் எமிலியும் இஷிமுராவும் தெருவலம்போனபோது வாசல் பெருக்கி, நீர்தெளித்து ஒருத்தி கோலமிட்டுக் கொண்டிருந்தாள். கோலப் புள்ளியில் மனம் குவித்து அதையே வேடிக்கை பார்த்து நின்று விட்டாள் எமிலி.

“இதுகோலம். ஒவ்வொரு வீட்டின் கலாசாரம். ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் இருக்கும் ஓர் ஓவியரை எழுப்பும் முயற்சி. ஒரு விளக்குமாறு தூரிகையாவதற்கான பயிற்சி. முதுகுத் தண்டு வளைத்து மூளைக்கு ரத்தம் பரப்பும் யோகாசனமும் இது. மற்றும் வீட்டுவாசலை அழகு செய்வதன் மூலம் தெருவையே சுத்திகரிக்கும் கூட்டு நடவடிக்கை”

சின்னப்பாண்டி விளக்க விளக்க “ஓ” என்ற ஒலிக்குறிப்பு நான்கு மாத்திரை நெடிலாயிற்று எமிலியின் வாயில். வீட்டுக்குள் போன சிறுவன் ஒருவன் கோலத்தை மிதித்துப் போனதில் காட்டமாகிப் போனாள் கோலக்காரி.

“ஏண்டா எடுபட்ட பயலே... உன் கால வெட்டி அடுப்புல வைக்க. கோலத்த மிதிச்சிட்டா போற... கொலப்பட்டினி போடறேன் ஒன்னிய”

“கோலம் என்பது புனிதம்; மற்றும் கலைப்படைப்பு. அதை அவமதித்தல் ஆகாது” சின்னப்பாண்டியின் விளக்கம் கேட்டு வியந்து போனாள் எமிலி.

☆☆☆☆☆☆

ஊர் சுத்தமாகத் தொடங்கிவிட்டது- ஊர்ப்புறம் சுத்தமாகவில்லை. அது பழையபடியே நிற்கிறது பல்லிளித்து. ஊர் நுழைவாயிலில் உட்கார்ந்தபடியே வரவேற்கிறார்கள்; குறையவேயில்லை. மூக்கையும் கண்ணையும் மூடாமல் ஊருக்குள் நுழையவே முடியவில்லை. ஊராட்சியை அழைத்தார்கள். இருபக்கப் பள்ளங்களையும் சமன் செய்யச் செய்தார்கள். பள்ளம் நிறைந்ததில் சாலை விரிந்தது. மீண்டும் எரியலாயின உடைந்த விளக்குகள். அன்று இருட்டியதும் வழக்கம் போல் வந்த வாடிக்கையாளர்கள் அதிர்ந்து போனார்கள். அவர்களின் அனுபோகத்திற்கு பாத்தியப்பட்ட இடங்களிலெல்லாம் செம்மண் நிரப்பி அரிசி மாக்கோலம் இட ஏற்பாடு செய்துவிட்டாள் எமிலி. கோலமிட்ட பெண்பிள்ளைகள் அங்கங்கே தட்டாமாலை விளையாடிக் கொண்டிருந்தார்கள். வேறென்ன செய்வது? ஊர்த் தாண்டி ஓடியே போனார்கள் ஒதுக்கீட்டாளர்கள்.

“கோலம் வாசலை மட்டுமல்ல; ஊரையும் சுத்தம் செய்கிறது” என்றாள் எமிலி.

☆☆☆☆☆☆

கடைசியில் அட்டணம்பட்டியில் அந்த அதிசயம் நடந்தேவிட்டது. ஊராட்சி மன்ற உறுப்பினர்களோடு வீடு வீடாக ஏறி இறங்கினார்கள் சின்னப்பாண்டியும் எமிலியும் இஷிமுராவும்.

“அய்யா... அம்மா... நீங்கள் கொடுத்த குப்பையிலிருந்து தயாரிக்கப்பட்டது இந்த உரம். உங்களுக்கே திரும்பி வருகிறது உங்கள் சொத்து; வாங்கிக் கொள்ளுங்கள்” சின்னப்பாண்டி முன்மொழிய ஒவ்வொரு வீட்டுக்கும் ஒருகிலோ மண்புழு உரத்தை எடுத்து வழங்கினான் இஷிமுரா.

“இதோ இதுவும் உங்களுக்கு” இரு கையில் தாங்கி எமிலி எடுத்து நீட்டினாள் அந்த உரம்போட்டு வளர்க்க ஒரு ரோஜாச் செடியை.

“இனி ரோஜாவின் வாசம் பேசும் உங்கள் வீட்டுக் குப்பைகளை” சந்தோஷப் பிரமை பிடித்து ஊரே அவர்களை அண்ணாந்து பார்க்கிறது.

“யார் பெத்த பயலோ அந்த மஞ்சப்பய. யார் காட்டுச் சிறுக்கியோ இந்த வெள்ளைக்காரி. ஊர் பொழைச்ச பொழப்பையே மாத்திப் புட்டா



களே ரெண்டுபேரும். சின்னப்பாண்டி... நீ செயிச்சுட்டடா” அவுகள முன்னவிட்டுப் பின்ன நின்னு அவராப் பொலம்புறாரு பொறணி பேசிப் பேசியே புத்துவச்சுப்போன காட்டுக் கருப்பன்.

புறம்பேசறான் பாருங்க... அவன வார்த்தையால அடிக்கிறது வருடிக் குடுக்கிற மாதிரி, செயலால அடிக்கிறதுதான் செருப்பால அடிக்கிற மாதிரி. சின்னப்பாண்டி செயலால அடிச்சுட்டான்.

☆☆☆☆☆☆

இந்திய விவசாயம் பார்க்க ஆசைப்பட்டவர்களைச் சின்னப்பாண்டி அழைத்துப் போனான் தோட்டத்துக்கு. ஏறுவெயில் நேரம். நெல்வயலுக்கு உரம் தூவிக் கொண்டிருந்தார் கருத்தமாயி.

நாப்பத்தஞ்சாம் நாளு உரம் அடிக்கலேன்னா இந்த ஐ.ஆர்.64 படுத்திருது கழுதை. தொண்டைக்குள்ள வச்சிருக்கிற கருதத் துப்ப மாட்டேங்குது.

யூரியாவும் பொட்டாசும் உரப் பெட்டியில் அடித்துத் திரும்பும் ஒலிகளும், நீராடிக் கிடக்கும் சேற்று வயலில் பயிர்களுக்கு ஊடே உரம் விதைத்துக் கொண்டே சகதிக்குள் அவர் ஓடிக் கடக்கும் ‘சதக்பதக்’ ஓசைகளும் அந்த வெளிகளின் நிசப்தத்தை உடைத்து நிறைத்தன.

வரப்பில் நின்று அந்த விவசாயியின் தவத்தையே கவனித்துக் கொண்டிருந்தார்கள் எமிலியும் இஷிமுராவும்.

நாலு குறுக்கம் உரம் தூவி முடித்ததும் கிணற்று மேட்டில் பூவரச மரத்தடியில் கஞ்சி குடிக்க உட்கார்ந்தார் கருத்தமாயி.

அவரையே வியந்து பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, உண்மையான சுதந்திர மனிதர் உங்கள் தந்தைதான் என்று எமிலி சொன்னதை அவருக்குச் சொன்னான் சின்னப்பாண்டி. “என்ன பொழப்பு எம் பொழப்பு? மண்ணுக்குக் கீழ கெடக்கு மண்புழு; மண்ணுக்கு மேல கெடக்கோம் நாங்க. இதுல எங்க இருக்கு தாயி சுதந்திரம்?”

சின்னப்பாண்டி அவர் சொன்னதைச் சொன்னதும் பூவரசங் குருவிகளெல்லாம் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கச் சிரித்தாள் எமிலி.

“உங்களைப்போல் இன்புற்ற மனிதர் யாருமில்லை பூமியில். இரை தேடும் திசை தவிர வேறுதிசை அறியாத பறவையைப்போல- நாளைக்குச் சேமிக்க வேண்டும் என்று சிரமப்படாத காட்டுச் சிங்கத்தைப்போல நீங்கள் தன்னிச்சையாக வாழ்கிறீர்கள். உங்களுக்கு மட்டுமல்ல- ஒவ்வொரு




இந்திய உழவனுக்கும் வறுமைக்குப் பக்கத்தில் இப்படி ஒரு வாழ்க்கை வழங்கப்பட்டிருக்கிறது. பணத்தாலும் பதவியாலும் மதத்தாலும் மனிதன் உயர்ந்தபட்சமாய்ச் சுதந்திரத்தைத்தான் எட்டப் பார்க்கிறான். கடைசியில் அதே பணத்தால்- பதவியால்- மதத்தால் அவன் எட்ட நினைத்த சுதந்திரத்தை இழந்து நிற்கிறான். அந்தச் சுதந்திரம் உங்களுக்கு வாழ்வுரிமையாய் வாய்த்திருக்கிறது”

எமிலி விட்ட இடத்தில் இப்பொழுது இஷிமுரா தொடர்ந்தான்.

“எமிலியை நானும் வழிமொழிகிறேன். திறந்த வானம், தாவரக் காற்று, திசைகளுக்குச் சுவர்கட்டி நிற்கும் தூரத்து மலைகள், பறவைகளின் பாடல்கள், மழைத்துளிகளின் ஆசீர்வாதம் இதற்குள்தான் உங்கள் தொழில்; இதற்குள்தான் உங்கள் வாழ்க்கை எனில் யாருக்கு வாய்க்கும் இது? ஒற்றையடிப் பாதையில் தன்னந்தனியே நடந்துபோகும் சுகம் உலகத்தின் எந்த ஜனாதிபதிக்கும் வாய்க்கவில்லை. ஒருவன் துப்பாக்கிகளின் துணையோடு பூப்பறிப்பதும், ஒருவன் உறக்கத்தை நூறுபேர் காவல் காப்பதும், இரண்டு மூன்றுபேர் உண்டுபார்த்து ஒருவனுக்கு உணவு படைப்பதும் சுதந்திரம் அல்ல. அது சிகரத்தில் வைக்கப்பட்ட சிறை. எந்த உழவனுக்கும் அப்படி ஒரு தண்டனை வழங்கப்படவில்லை. வாழ்க்கை என்பது வெறும் இருத்தலிலா இருக்கிறது?”

“இல்லை விடுபடுதலில் இருக்கிறது” என்றாள் எமிலி; தொடர்ந்தாள்.

**“ஓர் அம்பின் ஆற்றல் துலங்குவது அம்பறாத்துணியில் இல்லை; வில்லிலிருந்து விடுபடுதலில்”**

“யாத்தே வெள்ளைக்காரி மகளே... நானா விடுபட்டவன்? உசுரு உடம்ப விட்டு வெளியேறுமுன்ன பொழப்பு கடனைவிட்டு வெளியேறுமான்னு தெரியாமக் கெடக்கேன். மூணுகடன் பட்டவன் நானு. அதுகளக் கழிச்சுட்டு இந்த ஒத்தைப் பயலுக்கு எங்க சக்திக்குத் தக்கன ஒரு ஏப்பை சாப்பையாப் பாத்துக் கலியாணம் முடிச்சுட்டாப் போதும். அப்பறம் அட்டணம்பட்டிச் சுடுகாட்டுல எனக்குன்னு ஒரு எடம் இல்லாமலா போயிரும்?”

“மறுக்கப்பட்ட பொருளாதாரத்தை, சுரண்டப்படும் வாழ்க்கையை இந்திய உழவர்களுக்கு மீட்டுக்கொடுத்தால் போதும்; அவர்கள் வாழ்க்கை நிமிர்ந்துவிடும். இங்கே மண் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது; மனிதர்கள் சபிக்கப்பட்டிருக்கிறார்கள்”

சின்னப்பாண்டியின் எதார்த்த மொழியில் ஈர்க்கப்பட்டார்கள் இருவரும்.

(தொடரும்)

## “பிரியுங்கள் தோழர்களே... சாவிலிருந்து வாழ்வைப் பிரிப்பதுபோல”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசின் கொடூரத்தனத்திற்கு பாலகன் படுகொலை தக்க சாட்சி

## த.தே.ம.முன்னணி கண்டனம்

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவருடைய மகன் பாலச்சந்திரன் பிரபாகரன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின்னர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமைக்கான ஆதாரங்களை பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டியங்கும் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது. இப்படங்கள் பாலச்சந்திரன் மோதல் நடைபெற்ற போது இடையில் சிக்கி இறக்கவில்லை என்பதையும் மாறாக இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பின்னரே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது. பன்னிரண்டு வயதுப் பாலகனான பாலச்சந்திரன் போராளியல்ல. அவர் ஒரு பொது மகன் என்பது உலகம் அறிந்த விடயம்.

கைதியாக உள்ள ஒரு போராளியைக் கொல்வதே சர்வதேச சட்டத்தின் கீழ் ஒரு மோசமான குற்றமாக இருக்கும் நிலையில் தாம் கைது செய்து வைத்திருந்த பொது மகனை அதுவும் 12 வயது சிறுவனை கொலை செய்துள்ளனர். இது மிக மோசமான யுத்தக் குற்றமாகும். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக சனல் 4 உட்பட பல சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடகங்களும் இணையத்தளங்களும் பெருமளவு ஆதாரங்களை கடந்த காலத்தில் வெளியிட்டு இலங்கை அரசின் இனப்படுகொலையை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தியிரு தன.

இந்நிலையில் சனல் 4 வெளியிட்டுள்ள பாலச்சந்திரனின் படுகொலை ஆதாரங்கள் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள கொடூரங்களை மேலும் நிரூபிக்கும் வலுவான சான்றாகவும் அமைந்துள்ளது. இப்படுகொலையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இவை யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள். அது மட்டுமின்றி யுத்தம் முடிந்து 3 வருடங்கள் கடந்த பின்னரும் தமிழினத்தை இல்லாது அழிக்கும் நோக்கில் கட்டமைப்புசார் (Structural) இன அழிப்பு பல்வேறு கோணங்களில் திட்டமிட்டு அசுர வேகத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே, பாலச்சந்திரனுடைய படுகொலை உட்பட நடைபெற்ற இனப் படுகொலைகள் தொடர்பாக சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டமைப்பு சார் இன அழிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்காமல் அந்த இலக்கை அடைய முடியாது. இந்த இரண்டு விடயங்களையும் செயற்படுத்துவதற்கும் ஏற்ற பாதுகாப்பான சூழலை உருவாக்கும் வகையில் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் இலங்கை அரசியல் அமைப்பிற்கு வெளியில் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பில் இடைக்கால நிர்வாகம் ஒன்று உடனடியாக ஏற்படுத்தப்படல் வேண்டும்.

அவ்வாறான நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பாக குறிப்பாக மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனப்படுகொலை தொடர்பாக ஓர் முழுமையான சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை நடத்துவதற்குத் தேவையான சாட்சியங்களைத் திரட்டுவதற்குமுரிய பாதுகாப்பான சூழலை உருவாக்க முடியும். அத்துடன் அசுர வேகத்தில் முன்னெடுக்கப்படுகின்ற கட்டமைப்பு சார் இன அழிப்பையும் தடுக்க முடியும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (செ-11)

## புதையல் தோண்டிய மூவர் கைது!

திருகோணமலை -புல்மோட்டை- அரிசிமலை-பொத்மலகுடா பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுபட்டிருந்த மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள புராதன இடம் ஒன்றில் புதையல் அகழ்வில் ஈடுபட்டிருந்த வேளை நேற்று முன்தினம் இரவு இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் புல்மோட்டை பகுதியை சேர்ந்தவர்கள் ஆவர். புல்மோட்டை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டசந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்கென புல்மோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (செ-2)

# நிதி அமைச்சின் செயலாளர் பதவி விலக்கப்பட வேண்டும்

## அமைச்சர் விமல் கோரிக்கை

நிதி அமைச்சின் செயலாளர் பதவி விலக்கப்பட வேண்டுமென அமைச்சர் விமல் வீரவன்ச கோரியுள்ளார். நிதி அமைச்சின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர பதவி விலக்கப்படும் வரையில் அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கேற்பதில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பீ.பி.ஜயசுந்தரவின் சில யோசனைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார். இது மிகவும் மோசமான நிலைமையாகும் என அமைச்சர் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பீ.பி.ஜயசுந்தரவை பொருளியல் கொலையாளி என அமைச்சர் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

# சிகரெட் பெட்டிகளில் சுகாதார அறிவுறுத்தல்

## அவசியத்தை வலியுறுத்தி எதிர் மனு நிராகரிப்பு

சிகரெட் பெட்டிகளில் சுகாதார அறிவுறுத்தல்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு இடைக்கால தடை விதிக்குமாறு இலங்கை புகைத்தல் நிறுவனம் விடுத்த கோரிக்கையை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சிகரெட் பெட்டிகளில் 80 சதவீதமான இடங்களில் சிகரெட் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் குறித்து கூறப்பட்டிருக்க வேண்டும் என சுகாதார அமைச்சு சுற்றறிக்கை வெளியிட்டது.

எனினும் அவ்வாறு செய்தவன் மூலம் தமக்கு கால விரயம் ஏற்படுவதாக இலங்கை புகைத்தல் நிறுவனம் குறிபிட்டுள்ளது. அத்துடன் சுகாதார கருத்துக்களை அச்சிட சிகரெட் பெட்டிகளில் 80 வீதமான இடத்தை ஒதுக்க முடியாது என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்த கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது. (செ-2)

# கலை இலக்கிய வட்டத்தின் 18 ஆவது ஆண்டு விழா

(பூந்தோட்டம்)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் கலாசார மண்டபத்தில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி க.பேணாட், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன், வவுனியா தெற்கு கல்வி வலய பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்திறர்களாக மக்கள் மாமணி நா.சேனாதிராஜா, வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ச.சுப்பிரமணியம், வவுனியா இந்துமாமன்றத்தின் செயலாளர் சி.ஏ.இராமசுவாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின் போது மாருதம் சஞ்சிகையின் 13 ஆவது இதழின் வெளியீட்டுரையினை கவிஞர் தனசீலன் ஆற்ற அறிமுகவுரையினை பா.பாலசுந்தரம் நிகழ்த்துவார். முதற் பிரதியினை அருட்கலைவாரிதி கலாபூசணம் ஸ்தபதி சு.சண்முகவடிவேல் பெறுவார்.

அத்துடன் வட்டூர்க் கவிஞர் கதிர் சரவணபவனின் செம்மொழி மீளாய்வு நூலின் முதற்பிரதியை வவுனியா வடக்கு பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் வி.குகேந்திரன் பெற அறிமுகவுரையினை சைவப்புலவர் கலாபூசணம் செ.குணபாலசிங்கம் வழங்கவுள்ளார். (செ-2-266)

# "மௌன மொழிகள்" நூல் அறிமுகவிழா

யாழரசு மௌன மொழிகள் நூலின் அறிமுகவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியா வைரவபுளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் அ. சிவபாலசுந்தரன், சிறிடெலோ கட்சியின் செயலாளர் ப.உதயராசா, சிறப்பு விருந்தினர்களாக வவுனியா வடக்கு வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன், வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் செல்வி மு.அன்னமலர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன், ஓமந்தை கோட்டக்கல்வி அதிகாரி திருமதி எம். ஏ.கே.சகாயராஜா, பொஸ்டோ நிறுவனத்தின் தலைவர் வி. நாகேந்திரராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். விசேட அழைப்பாளர்களாக பட்டானிசூர் புளியங்குளம் கிராமசேவகர் வி. யோகநாதன், ஆதிவிநாயகர் ஆலய தலைவர் தி. தில்லைநாதன், வரியிறுப்பாளர் சங்க தலைவர் செ. சந்திரகுமார், ஊடகவியலாளர் ந. கபிலநாதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது நூலின் ஆய்வுரையினை ஆசிரிய நிலையத்தின் முகாமையாளர் சு.ஜெயச்சந்திரன் ஆற்றுவார். (செ-2-266)

# ஆயுர்வேத ஆணையாளருக்கு அசிட் தாக்குதல்!

வடமத்திய மாகாண ஆயுர்வேத ஆணையாளர் குமார அல்விஸ் அசிட் தாக்குதலுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அசிட் தாக்குதல் காரணமாக குமார அல்விஸின் முகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக அநுராதபுர வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குமார அல்விஸை கொழும்பு ஆசிரி வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நேற்று அதிகாலை இவர் வீட்டிலிருந்த வேளை அங்கு வந்த இரு நபர்கள் ஆயுர்வேத ஆணையாளர் மீது அசிட் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். (செ-2)








யாழ்.நவாலி ஸ்தான அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வினையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற அதிபர் சி.நாகையா வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிய பின் அருகில் நிற்பதையும் பாடசாலை ஆசிரியர் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகளவிலான மாணவர்கள் இம்முறை பல்கலைக்கு அனுமதிக்கப்படுகின்றனர்

## வரலாற்றில் இது அதிகரித்த தொகை-கல்வியமைச்சர்

வெளிவந்துள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் இம்முறை பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களின் எண்ணிக்கை 63.1 சதவீதமாக அதிகரித்துள்ளதென கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லயிலுள்ள கல்வியமைச்சில் நேற்று முன்தினம் காலை நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் கலந்து கருத்துக்களை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக இம்முறையே ஆகக்கூடிய மாணவர்கள் பல்கலைக்கழத்துக்கு அனுமதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டை அடையும் போது இதன் சதவீதம் 80 சதவீதமாக அதிகரிக்கப்படும் வகையில் இலங்கையின் கல்விமுறை மேலும் வளர்ச்சியடையுமெனவும் அமைச்சர் கூறினார்.

வரலாற்றில் முதல் தடவையாக கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படுகின்ற போதிலும் இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 4 சதவீத வளர்ச்சியினை மாத்திரமே கொண்டிருப்பதனால் இதனை பாரிய வெற்றியாக கருதமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும் கல்வியமைச்சு, பரீட்சைகள் திணைக்களம், தேசிய கல்வி நிறுவனம் ஆகியவற்றின் முயற்சியினால் ஓரளவு பலாபலன்களை அடையக் கூடியதாகவிருந்த போதிலும் எதிர்காலத்தில் இதன் சதவீதத்தை அதிகரிக்கும் வகையில் வினாத்தாள்கள் மற்றும் பாடவிதானங்களில் மறுசீரமைப்புகள் முன்னெடுக்கப்படுமெனவும் அமைச்சர் கூறினார்.

விஞ்ஞானத்துறையைப் பொறுத்தவரை கொழும்பிற்கு அடுத்தபடியாக முறையே மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, திருகோணமலை, கம்பஹா, காலி கண்டி என்ற ஒழுங்கில் மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

கணிதத்துறையில் இரண்டாம் இடத்தில் காலியும் அதனைத் தொடர்ந்து முறையே மாத்தறை, யாழ்ப்பாணம், கண்டி என்ற ஒழுங்கிலும் மாணவர்கள் தெரிவாகும் எண்ணிக்கை அமைந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து சேர்ந்த அநேக மாணவர்களும் பல்கலைக்கழத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

விஞ்ஞானத்துறையில் இரத்தினபுரி , மொனராகலை, மாத்தளை, நுவரெலியா முல்லைத்தீவு, பொலனறுவை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்கனைச் சேர்ந்த மாணவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றனர்.

இதேவேளை கல்விப் பொதுத் தராதர சாதாரணத்தரப் பரீட்சையில் ஆங்கில செயன்முறை பரீட்சையொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று கல்வியமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆங்கில செயன்முறை பரீட்சையானது ஆங்கில மொழிப்பரீட்சையின் ஒரு பகுதியாக அமையும். ஆங்கில மொழிப் பரீட்சையில் எழுத்துப்பரீட்சைக்கு 90 புள்ளிகளும் ஆங்கில பேச்சு பரீட்சைக்கு 10 புள்ளிகளும் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சாதாரணதரத்திற்கு புதிய பாடங்களை அறிமுகப்படுத்தும் திட்டம் ஒன்று இருக்கின்றது.இதன் பிரகாரம் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தை மாணவர்கள் தெரிவு செய்ய முடியும்.

இந்த தொழில்நுட்ப பாடத்தொகுதியில் பொறியியல், விஞ்ஞானம் உள்ளிட்ட பாடங்களும் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (செ-2)

# டெங்கு ஒழிப்பு தெரு நாடகம்

(பூந்தோட்டம்)

வவுனியா நகரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு காய்ச்சல் தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு தெருவெளி நாடகம் அரங்கேற்றப்பட்டு வருகிறது.

சேவாலங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் சுகாதார திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் டெங்கு நோயினால் ஏற்படும் தாக்கங்கள், அதனை கட்டுப்படுத்தும் வழிவகைகள் தொடர்பிலும் விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

நகரப்பகுதியில் உள்ள முக்கிய சந்திகளில் இந்நாடகம் மக்களுக்கு காண்பிக்கப்பட்டு வருவதுடன் டெங்கை கட்டுப்படுத்தாதோருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பிலும் சுகாதார பகுதியினரால் விளக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது. (செ-2-250-266)

# சுகாதார சீர்கேடுகளுடன் முல்லைத்தீவு உணவகங்கள்

## கவனமெடுக்குமாறு நுகர்வோர் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரப்பகுதியில் உள்ள ஒரு சில தேநீர், உணவுக்கடைகளில் ஒரே தண்ணியிலேயே பாத்திரங்களை கழுவி பயன்படுத்துவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த பகுதியில் உள்ள தேநீர் மற்றும் உணவுக்கடைகளில் ஒரு நீரை வைத்து அனைத்து பாத்திர வகைகளையும் கழுவி பயன்படுத்துகின்றனர். இதனால் சுகாதார சீர்கேடு இடம்பெறுகின்றது. நுகர்வோர் பல நோய்களுக்கு உள்ளாக வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

இது தொடர்பாக அப்பகுதி சுகாதார பரிசோதகர்கள் எந்தவிதமான சோதனை நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வாறு நுகர்வோரின் நலனில் அக்கறை கொள்ளாது தமது நலனுக்காக நுகர்வோரை நோய்க்கு உள்ளாக்கும் வர்த்தகர்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென நுகர்வோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (செ-3-267)

# தமிழகத்திலுள்ள இலங்கை நிறுவனங்களுக்கு மத்திய அரசு பாதுகாப்பு வழங்க வேண்டும்

## அமைச்சர் கெஹலிய கோரிக்கை

தமிழகத்திலுள்ள இலங்கை நிறுவனங்கள் அனைத்துக்கும் உரிய பாதுகாப்பினை வழங்குமாறு இந்திய மத்திய அரசாங்கத்திடம் இலங்கை கோரிக்கை விடுத்திருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

தமிழகத்திலுள்ள இலங்கை வங்கி அலுவலகம் மற்றும் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் கிளை அலுவலகம் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து இந்திய மத்திய அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும் அவர் கூறினார்.

தமிழகத்திலுள்ள இலங்கை நிறுவனங்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குமாறு மத்திய அரசாங்கத்திடம் தாம் ஏற்கனவே கோரியிருப்பதாகவும் இந்தியாவுக்குச் செல்லும் இலங்கை யாத்திரிகர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவது குறித்து இந்திய மத்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஏதாவது பிரச்சினை ஏற்படும் போது அரசாங்கம் மாநில அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தாது நேரடியாக மத்திய அரசாங்கத்துடனேயே பேச்சுவார்த்தை நடத்தும். அதேபோல இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி விடயத்திற்கு இரு நாடுகளும் விரிவாகப் பேச்சுவார்தை நடத்தியே தீர்வுகாண முடியும்

அவசர அவசரமாக இவ்விடயத்துக்குத் தீர்வொன்றை முன்வைக்க முடியாது. இந்தியா ஒரு பலம் பொருந்திய நாடு. இலங்கை ஒரு சிறிய நாடு. எனவே இவ்விடயத்தில் சுமுகமான பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண முடியும் .இரு நாட்டுக்கும் இடையில் பிரச்சினையைத் தோற்றுவித்து முரண்பாடுகளை வளர்க்க விரும்பும் தரப்பினரே மீனவர்கள் மீதான தாக்குதல் சம்பவங்களைத் தூண்டிவிடுகின்றனர் என்றார். (செ-2)

# கிளிநொச்சி பாடசாலைகளில் காவலாளிகள் பற்றாக்குறை

## உடைமைகள் பல களவு போகின்றன

(ஆனையிறவு)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட பெரும்பாலான பாடசாலைகளில் காவலாளி மற்றும் அலுவலக உதவியாளர் வெற்றிடங்கள் நிலவிவருவதாக அப்பகுதி சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக இரவுநேர காவலாளி இன்மையால் பாடசாலைச் சொத்துக்கள் களவாடப்படுகின்றன.

அண்மையில் கட்டைக்காடு அ.த.க. பாடசாலை, தட்டுவன்கொட்டி கண்ணகை அம்மன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் பல உடைமைகள் களவாடப்பட்டுள்ளன.

அத்துடன் அலுவலக உதவியாளர்களும் இல்லை.உயர்தர பாடசாலைகளில் இரண்டு அலுவலக உதவியாளர்கள் தேவைப்படுகின்றபோது ஒரு அலுவலக உதவியாளரே காணப்படுகின்றார்.

எனவே இவ்விடயத்தில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமென அப்பகுதி சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (செ-3-264)








வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் வலிகாமம் மேற்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் கண்காட்சியும் கலைநிகழ்வும் வலிகாமம் மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் ஜே.ஜே [illegible] நாடாவெட்டி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதையும் கண்காட்சியை விருந்தினர்கள் பார்வையிடுவதையும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட மக்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பண்டத்தரிப்பு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 22ஆவது அமர்வு ஆரம்பமாக இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், இலங்கை விவகாரம் சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜெனீவா கூட்டத்தொடர்தொடங்குவதற்கான நாட்கள் நெருங்க நெருங்க இலங்கை இது இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்களை நியாயப்படுத்துவதற்கு வாய்ப்பாகியது.

அதுமட்டுமன்றி பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தம்துபணியகம் அளிக்க முன்வந்த ஆலோசனை மற்றும் உதவிகளை இலங்கை அரசாங்கம் பெற்றுக் கொள்ளவில்லை என்று ஐ.நா. மனித உரிமை கத்தை அதிகப்படுத்திவிட்டன.

இத்தகைய பின்னணியில் இப்போது புதிய **பூகம்பமாக வெடித்திருப்பது** விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகர னின் 12 வயதான கடைசி மகன் பாலச்சந்திரன் பற்றிய படங்கள்.

சனல்4 தொலைக்காட்சியில் இலங்கையின் நிகழ்ந்தது என்பதை அரசாங்கம் கூறவில்லை. அதுமட்டுமன்றி, அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாகவோ அதற்கு என்ன ஆனது என்றோ கூறவில்லை.

இவ்வாறு பாலச்சந்திரன் பற்றிய பல வினாக்களுக்கு அரசாங்கம் விடையளிக்காத- விடையளிக்க முடியாத நிலையில்தான்

# இலங்கையின் கழுத்தை நெரிக்கும் பாலச்சந்திரனின் புகைப்படங்கள்...!



கொலைக்களங்கள் என்ற தலைப்பில் இதுவரை இரண்டு ஆவணப்படங்களை தயாரித்து வெளியிட்ட **கல்லும் மக்கரே** என்ற இயக்குநர் மூன்றாவதாக **சூடு தவிர்ப்பு வலயம்** என்ற பெயரில் மற்றொரு ஆவணப் படத்தை தயாரித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் திரையிடவுள்ள இந்த ஆவணப் படத்தில் இலங்கை அரச படைகளின் போர்க்குற்றங்கள் அதற்கான புதிய சாட்சியங்களை உள்ளடக்கியுள்ளதாக கல்லும் மக்கரே தெரிவித்துள்ளார்.

லண்டனில் இருந்து வெளியாகும்த **இண்டிபென்டன்ட்** நாளிதழ், இந்தியாவில் இருந்து வெளியாகும் த இந்து ஆகியவற்றில் ஒரே நேரத்தில் இந்த ஒளிப்படங்களையும் அது பற்றிய கட்டுரைகளையும் கல்லும் மக்கரே வெளியிட்டது உலகெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது, பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் அரச படையினரால் உயிருடன் பிடிக்கப்பட்டு, தடுத்து வைத்திருந்த பின்னரே கொல்லப்பட்டதை இந்த ஆவணப்படம் மூலம் உறுதிப்படுத்த சனல்4 தொலைக்காட்சியும் அதன் குழுவினரும் தயாராகியுள்ளனர்.

இந்த ஒளிப்படங்கள் இணையங்களி இவை பொய்கள் என்றும் புனைவுகள் என்றும் ஒரே பதிலுடன் முடித்துள்ளது.

பாலச்சந்திரனின் இந்த ஒளிப்படங்கள் ஜெனீவா கூட்டத்தொடரை இலக்கு வைத்து வெளியிடப்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறும் வாதம் உண்மையாகவே இருந்தாலும் இது பொய் என்பதை நிரூபிக்க அரசாங்கம் தயாரா என்ற கேள்வி நிச்சயம் எழுகிறது.

விடுதலைப்புலிகள் சிறார்களைப் படையில் சேர்த்துக்கொண்டதை சாதகமாக பயன்படுத்தி சர்வதேச சமூகத்தை தன்பக்கம் திருப்பிக் கொண்ட அரசாங்கம் இப்போது ஆயுதம் தரிக்காத 12 வயதுச் சிறுவனின் மரணத்துக்குப் பதில் கூறவேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளது.

அரசாங்கம் வெளியிடும் மறுப்பு அறிக்கைகளால் பாலச்சந்திரன் விவகாரம் அடங்கிவிடும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஏனென்றால், அது பூகம்பமாக வெடித்துள்ள காலம் ஜெனீவா கூட்டத்தொடரை

அரசாங்கம் மீதான அழுத்தங்களும் அதிகரித்து வருகின்றன.

வரும் திங்கட்கிழமை 25 ஆம் திகதி தொடங்கும் இந்தக் கூட்டத் தொடர் அடுத்த மாதம் 22 ஆம் திகதிவரை தொடர்ந்து இடம் பெறப்போகிறது.

கள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஜெனீவா கூட்டத்தொடருக்கு கடந்தவாரம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, இலங்கை அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை

-கே. சஞ்சயன்-

அண்டியதாக இருப்பதாலும் இந்த விவகாரம் சர்வதேச அளவில் பெரிதாக கவனத்தை ஈர்த்துள்ளதாலும் இந்த நெருக்கடியின் தாக்கத்தில் இருந்து இலங்கை அரசாங்கத்தில் இலகுவாக விடுபட முடியாது.

ஜெனீவா அமர்வுகள் தொடங்குவதற்கான நாட்கள் நெருங்க நெருங்க புதிய புதிய தலைவலிகளும் பிரச்சினைகளும் இலங்கை அரசாங்கத்தின் கழுத்தை இறுக்கத் தொங்கி விட்டன. ஜெனீவா இராஜதந்திரப்போருக்கு அரசாங்கம் கடந்த ஓர் ஆண்டாகவே தயாரிப்படுத்தல்களை மேற்கொண்டு வருகிறது.

கடந்த ஆண்டு ஜெனீவா தீர்மானத்தைத் தோற்கடிக்க பெருமெடுப்பிலான இராஜதந்திர முயற்சிகளை மேற் கொண்ட அரசாங்கம் இம்முறை அந்தளவுக்கு ஈடுபாடு காட்டுவதாகத் தெரியவில்லை. அதுவும் வெளிவிவகார அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதகாரிகளை ஜெனீவாவுக்கு அனுப்பவே தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

இம்முறை ஜெனீவா கூட்டத் தொடர் இலங்கை அரசாங்கத்தின் மீதான அழுத்தங்

# 22 ஆவது அமர்வில் தப்பிக்குமா இலங்கை?

இந்தக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு நெருக்கடி ஏற்படும் என்பது ஓர் ஆண்டுக்கு முன்னரே தெரிந்த விடயம்தான். அதாவது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு மறைமுகமாக ஓர் ஆண்டு கால அவகாசம் கொடுத்து கடந்த ஆண்டு மார்ச் மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதே இம்முறை நெருக்கடி அதிகமாக இருக்கும் என்பது உறுதியாகிவிட்டது.

ஆனால், அப்போது எதிர்பார்க்கப்பட்டதைவிட பன்மடங்கு அதிகமான அழுத்தங்களை இலங்கை அரசாங்கம் சுமந்து கொள்ளும் நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. காரணம் இந்த ஓர் ஆண்டு இடைவெளிக்குள் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றத் தவறிய பொறுப்புகளும் அதன் நடவடிக்கைகளும்தான்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கியமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் அக்கறை காட்டவில்லை என்ற சர்வதேசத்தின் குற்றச்சாட்டுக்களை உறுதிசெய்வது போன்றே அண்மையில் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் வெளியிட்ட கருத்து அமைந்திருந்தது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் 35 வீதமான பரிந்துரைகள் மட்டும்தான் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்று அவர் அந்தச் சந்திப்பில் ஒப்புக்கொண்டிருந்தார். களையும் நிறைவேற்றவில்லை. அதற்கு உதவி அளிக்க ஐ.நா. முன்வந்தபோது அதையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற நிலை மிகப்பெரிய சிக்கலை இலங்கை அரசுக்கு ஏற்படுத்திவிட்டது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமல் இலங்கை அரசாங்கம் அலட்சியம் காட்டுகிறது. ஐ.நா. வின் தீர்மானத்தை அவமதிக்கும் வகையில் நடந்துகொள்கிறது என்ற சர்வதேச கணிப்பு இதன்மூலம் உருவாகிவிட்டது.

இதற்கிடையில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவைப் பதவி நீக்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை மற்றும் அதற்காக கையாளப்பட்ட வழிமுறைகள் என்பன இலங்கை அரசாங்கத்தினால் நீதித்துறை சுதந்திரம் பறிக்கப்பட்டுவிட்டது என்று வெளியுலகம் தீர்மானிக்க காரணமாகிவிட்டது.

அதுதவிர திருகோணமலையில் சுதந்திர தினத்தன்று அதிகாரப்பகிர்வை நிராகரிக்கும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட கருத்து இந்த அரசாங்கம் நிரந்தர அமைதிக்கோ, நல்லிணக்கத்துக்கோ வழி செய்யும் அரசியல்தீர்வு ஒன்றை எட்டுவதற்கு எந்த நடவடிக்கையையும் எடுக்கத் தயாரில்லை என்றும் கருத வைத்துவிட்டது.

இப்படியே ஒன்றன்பின் ஒன்றாக நடந்தேறிய [illegible] மற்றும் [illegible] அச்சு ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகளிலும் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது.

தமிழ்நாட்டிலும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் மட்டுமன்றி இங்கும் இது உணர்வுபூர்வமான பிரச்சினையைக் கிளப்பிவிட்டுள்ளது.




இத்தகைய நிலையில் பாலச்சந்திரன் கொலை பற்றிய எந்தக் குற்றச்சாட்டையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது.

பாலச்சந்திரன் இருதரப்பு மோதலுக்குள் [illegible] இறந்துபோனதாக அரசாங்கம் [illegible] போதிலும் அது எப்போது, எங்கே களை இன்னும் அதிகரிக்கும் வாய்ப்புகளைக் கொண்டுள்ள நிலையில் கொமன்வெல்த் கூட்டத் தொடரையேனும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதில்தான் அரசாங்கம் இப்போது கூடுதல் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்கள் கிளிநொச்சியில் அதிகரிக்கப்படவுள்ளன

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு



கிளிநொச்சியில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஒரு பல்தேசிய நிறுவனம் தனது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்க இருப்பதால் சுமார் ஆயிரத்து ஐந்நூறு பேருக்கு அதில் வேலை வாய்ப்பு கிடைக்க இருப்பதாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கூறியுள்ளார்.

அரசாங்கத்தினால் வட பகுதி வாழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்றிட்டத்தின் விளைவாக ஏற்பட்ட அனுகூலமாகும். மக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிவாரண உதவிகள் முடிவிற்கு வந்து கொண்டிருப்பதால் அரசாங்கமானது அரச மற்றும் தனியார் பங்காற்றலுடன் உருவாக்கப்படும் திட்டங்களுக்கு உதவுவதை குறிக்கோளாக கொண்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், தற்போது புதுமாத்தளன் பகுதியிலேயே பொதுமக்களுக்கான நிவாரணங்கள் அதாவது வீடுகளை அமைத்துக் கொள்வதற்கு கட்டடப் பொருட்களும் வீட்டுக்கு தேவையான பாவனைப் பொருட்களும் வாழ்வாதாரத்தை நிலைப்படுத்திக் கொள்ள வசதி வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுக் கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் அறிவியல் நகர் என்ற கிராமத்தில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு உயர்மட்ட நிறுவனம் ஒரு தொழிற்சாலையை நிறுவியுள்ளதாகவும் இதைவிட இன்னுமொரு நிறுவனம் 25 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழிற்சாலையை ஸ்தாபிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கவுள்ள தொழிற்சாலையில் , கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 500 இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கக் கூடியதாக இருக்கும்.

தொழிற்சாலை இயங்குவதற்கு முன்னர் சேவையில் ஈடுபடவுள்ள அனைவருக்கும் பயிற்சி அளிக்கப்படுமென்று ஆளுநர் கூறினார்.

ஏற்கனவே இவ்வாறான தொழிற்சாலைகள் வவுனியாவில் மூன்றும் மன்னாரில் இரண்டும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் பல்லாயிரக்கணக்கான வட பகுதி வாழ் மக்கள் தொழில் வாய்ப்பு பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (செ-2)

# கசிப்பு, சாராய உற்பத்தி கரைதுறைப்பற்றில் அதிகரிப்பு!

## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரை துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள முள்ளிவாய்க்கால் கிராமத்தில் கசிப்பு, கள்ளச்சாராய உற்பத்தி அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் மேற்குறித்த கிராமத்தில் குழுக்களுக்கிடையே, குடும்பங்களுக்கிடையே கருத்து முரண்பாடுகளும் சண்டைகளும் ஏற் படுகின்றன.

இதனால் மேலும் சில அசம்பாவிதங்களும் இடம் பெற வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

இதுதொடர்பாக பொலிஸாருக்கும் மது வரித் திணைக்களத்தினருக்கும் மக்கள் தெரிவித்தும் எந்த வித நடவடிக்கையும் மேற் கொள்ளப்படவில்லை.

இதனால் இச்செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுகின்றது. எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (செ-3-267)

# போர் பதுங்கு குழிகளை அகற்ற 14 மில்லியன் ரூபா தேவை

(கொழும்பு)

போரின் போது கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட மண் அணைகள் மற்றும் பதுங்கு குழிகளை அகற்றுவதற்கு 14 மில்லியன் ரூபாய் நிதி தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கு உதவியாக படையினரின் உதவியைப் பெற்றுக்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

போரின் போது கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட மண் அணைகளை அகற்றுவது பற்றி ஆராயும் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அனர்த்தமுகாமைத்துவ அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

போரின்போது ஏற்படுத்தப்பட்ட மண் அணைகளும் பதுங்கு அகழிகளும் நீர் வடிகாலமைப்பையும் நில அமைப்பையும் பாழாக்கியுள்ளன. இதனால் மழையினால் ஏற்படும் வெள்ளம் பல இடங்களிலும் தேங்கி மக்களின் வாழ்விடங்களையும் பயிர்ச் செய்கைப் பரப்புகளையும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளன.

எனவே, இந்த மண் அணைகளையும் பதுங்க அகழிகளையும் அழித்துச் சீர்படுத்துவதன் மூலம் பாதிப்புகளைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்ற நோக்குடனேயே இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

43 கிலோ மீற்றர் நீளமான மண் அணைகளை அகற்றிச்சீர்படுத்த சுமார் 14 மில்லியன் ரூபாய் நிதி தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்கு உதவியாக படையினரின் உதவியைப் பெற்றுக்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பணிப்பாளர் நாயகம்மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டியாராச்சி, மேலதிக மாவட்ட செயலாளர் எஸ்.சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (செ-2)

# அம்பாறையில் மீண்டும் நில அதிர்வு!

அம்பாறை வடிநாகல பிரதேசத்தில் மீண்டும் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு வேளையில் பாரிய சத்தத்துடன் நில அதிர்வு ஏற்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இந்த நில அதிர்வு தொடர்பாக தகவல் கிடைத்துள்ள போதிலும் நில அதிர்வு மானிகளில் அது பதிவாகவில்லை என புவி சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் என்.பி.விஜயானந்த தெரிவித்துள்ளார்.

இது மிகவும் வலுகுறைந்த நில அதிர்வாக இருக்கலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை சேனநாயக்க சமுத்திரத்தை அண்மித்த சரணாலயத்தில் இந்த வாரம் ஆய்வுகளை ஆரம்பிக்கவுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது. (செ-2)




★ 1847 - மெக்சிக்கோ - அமெரிக்கப் போர்: மெக்சிக்கோவின் புவெனா விஸ்டா நகரில் அமெரிக்கப் படைகள் மெக்சிக்கோ படைகளைத் தோற்கடித்தன.

★ 1870 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: மிசிசிப்பியில் இராணுவ ஆட்சி முடிவடைந்து அமெரிக்கக் கூட்டணியில் மீண்டும் இணைக்கப் பட்டது.

★ 1887 - பிரெஞ்சு ரிவியேராவில் இடம் பெற்ற நிலநடுக்கத்தில் 2ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★ 1893 - ருடொல்ஃப் டீசல் டீசல் இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1903 - கியூபா குவாண்டனாமோ விரிகுடாவை ஐக்கிய அமெரிக்காவுக்கு முடிவற்ற குத்தகைக்குக் கொடுத்தது.

★ 1904 - 10 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஐக்கிய அமெரிக்கா பனாமா கால்வாயின் உரிமையைப் பெற்றுக் கொண்டது.

★ 1905 - ரோட்டரி அமைப்பு ஆரம்பிக்கப் பட்டது.

★ 1917 - சென்பீட்டர்ஸ்பேர்க்கில் முதலாவது மக்கள் ஆர்ப்பாட்டம் இடம் பெற்றதன் மூலம் பெப்ரவரி புரட்சி ஆரம்பமானது.

★ 1919 - இத்தாலியில் பெனிட்டோ முசோலினி பாசிசக் கட்சியை ஆரம்பித்தார்.

★ 1941 - புளூட்டோனியம் முதற்தடவையாக உருவாக்கப்பட்டது.

★ 1944 - செச்னிய மற்றும் இங்குஷ் மக்கள் நிர்ப்பந்தத்தின் பேரில் மத்திய ஆசியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர்.

★ 1945 - இரண்டாம் உலகப் போர்: பிலிப் பைன்சின் தலைநகர் மணிலா அமெரிக்கப் படைகளினால் விடுவிக்கப்பட்டது.

★ 1947 - அனைத்துலக தரநிர்ணய ஸ்தாபனம் (ISO) ஆரம்பிக்கப்பட்டது.

★ 1966 - சிரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அரசு கவிழ்க்கப் பட்டது.

★ 1991 - தாய்லாந்தில் இராணுவத் தலைவர் சுந்தொங் கொங்சொம்பொங் தலைமையில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் பிரதமர் சட்டிச் சாய் சூன்ஹாவென் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 1997 - ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டது.

★ 1998 - மத்திய புளோரிடாவில் இடம் பெற்ற சுழற்காற்றில் 42 பேர் உயிரிழந்தனர்.

★ 2007- இங்கிலாந்தில் கிறேரிக் என்ற இடத்தில் தொடரூந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 22 பேர் காயமடைந்தனர்.

### பிறப்புகள்

★ 1633 - சாமுவேல் பெப்பீசு, பிரித்தானிய கடற்படைத் தளபதி (இ. 1703)

★ 1915 - எஸ்.ராஜரத்தினம், சிங்கப்பூரின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர்

★ 1924 - அலன் கோர்மாக், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர். (இ. 1998)

★ 1954 - ராஜினி திராணகம, இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளரும் பெண் உரிமை செயற்பாட்டாளரும். (இ. 1989)

★ 1965 - மைக்கேல் டெல், டெல் நிறுவனத்தை ஆரம்பித்தவர்.

★ 1983 - அசீஸ் அன்சாரி, அமெரிக்க நடிகர்

### இறப்புகள்

★ 1503 - அன்னமாச்சாரியார், கர்நாடக இசைக் கலைஞர் (பி. 1408)

★ 1719 - சீகன் பால்க், ஜேர்மனிய மதகுரு (பி. 1682)

★ 1821 - சோன் கீற்ஸ், ஆங்கிலக் கவிஞர் (பி. 1795)

★ 1848 - ஜான் குவின்சி ஆடம்ஸ், ஐக்கிய அமெரிக்காவின் 6ஆவது ஜனாதிபதி (பி.1767)

★ 1855 - கார்ல் ஃப்ரெடெரிக் காஸ், கணிதவியலர் (பி.1777)

★ 1868 - டபிள்யூ.இ.பி.டுபோய்ஸ், ஆபிரிக்க அமெரிக்க சமூக உரிமையாளர் (இ.1963)

★ 1973 - டிக்கின்சன் ரிச்சாட்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர். (பி.1895)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காயத்தில் நோய்த்தாக்கம்-விசேட கட்டுரை



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இம்முறை அழைப்பு மனம் மலர்ந்திருந்து வரவில்லை. வெங்காய செய்கையிலீடுபட்ட விவசாயிகளுக்கும் எமக்கும் பேரதிர்ச்சியை தந்திருக்கின்றது. தற்போதுள்ள காலநிலை மாற்றம். திடுதிப்பென சொல்லி வைக்காதது போது காலநிலை நிறையவே மாற்றங்கண்டிருக்கின்றது. இம்முறை நிகழ்ந்திருக்கும் பயிரழிவுகள் பலவிடயங்களை செய்யச் சொல்லி எமக்கு சவாலும் விட்டிருப்பது போலவே எண்ணத் தோன்றுகின்றது.

எமக்குத் தெரிந்த விளக்கங்களுடன் இடைக்காடு விவசாயிகளைச் சந்திக்க விரைந்தோம். மாலை 5.30 மணிக்கு மேலே தான் அனைத்து விவசாயிகளையும் சந்திக்க முடியுமென்பதால் அதற்கான நேரமும் தீர்மானிக்கப்பட்டது. இடைக்காடு வெங்காய செய்கையாளர்களுக்கு விலாவாரியாக ஏற்பட்டபிரச்சினை பற்றி விளக்கினோம்.

வெங்காய பயிருக்கு நடந்திருப்பது என்ன?

பூஞ்சண நோய்களின் ஆக்கிரமிப்பே பூஞ்சணம் ஏற்படுத்துகின்றது.

4. நுனிகருகலுடன் தொட்டந்தொட்டமாக இலைப்புள்ளி: இவ்வாறான இலைப்புள்ளியை அதாவது ஊதாப்புள்ளிகள் அல்லது தொப்பளங்களை ஏற்படுத்துவது ஓல்ற்றனேரியா போறி (Alternaria Porri) எனும் பூஞ்சணமாகும்.


இவற்றுடன் போரைரிசு (Botrytis) எனும் பூஞ்சணத்தின் தொற்றுதலும் சேர்ந்திருக்கின்றது. அளவுக்கு அதிகமாக பல பல பூஞ்சணங்கள் ஒன்றாகச் சேர்ந்து தொற்றுதலுக்குள்ளாகியிருப்பது இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 25-I

இடைக்காடு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சாமியிடமிருந்து திடீரென தொலைபேசி அழைப்பு வந்திருந்தது. விவசாயி என்பதனால் எனது கைப்பேசியில் அவருக்குரிய முன்னுரிமை கொடுக்க வேண்டியிருந்தது. ஆனாலும் கூட்டங்கள், விரிவுரைகளில் கைப்பேசியை மௌனித்து விட்டிருந்ததால் சிறிய தடங்கலுக்குப் பின்பு சாமியுடன் தொடர்பு கொண்ட போது தாங்கள் நடுகை செய்துள்ள வெங்காயப் பயிர் வழமைக்கு மாறாக அதனது தாள்களின் குருத்து அல்லது நுனிப்பகுதி கருகி அழுகிச் செல்வதையும். வெங்காயத் தாள்கள் சுருண்டு, அழுகி, தொட்டந்தொட்டமாக இருப்பதாகவும் குறிப்பிட்ட அவர் இதுபற்றி என்ன செய்யலாம் எனவும் வினவினார்.

பயிரில் பிரச்சினையென்றால் பயிரையும் அது வளர்ந்திருக்கும் நிலம், சூழல், வளர்க்கப்பட்ட விதம் என பலவற்றையும் அலசி ஆராய்ந்த பின்பு தானே பிரச்சினை என்னவென தெளிவாக கூறமுடியும். நோயாளியைப் பாராது நோய் தீர்க்க மருந்து கொடுத்தல் தவறல்லவே! இருந்த வேலைப்பளுவுக்கு மத்தியில் இடைக்காடு வெங்காயப் பயிர் விளைவிக்கப்பட்ட இடத்தை அவதானிக்கவும் விவசாயிகளை சந்தித்து கலந்துரையாடவும் விவசாய உயிரியல் துறை ஆசிரியர்கள், இறுதியாண்டு மாணவர்களடங்கிய குழு விரைந்தது. அங்கே வெங்காயப் பயிர் வாடிவதங்கியிருக்கும் காட்சியைப் பார்த்து அனைவருமே கவலையுற்றோம்.

சேதத்துக்குள்ளான வெங்காயப் பயிரின் மாதிரிகளை சேகரித்ததுடன் அவ்வூர் விவசாயிகளுடனும் கலந்துரையாடி விட்டு சேகரித்த பயிர் மாதிரிகளுடன் பீடத்துக்கு விரைந்தோம். இப்பிரச்சினை பற்றி நாம் தெரிந்து கொள்ள பிந்தியதையிட்டு கவலையடைந்த அதேவேளை இதுபற்றி விவசாய பெருமக்களுக்கு உடனடியாக தெரியப்படுத்த வேண்டிய தேவையின் அவசியத்தையும் உணர்ந்து கொண்டோம். அன்றைய நாள் இரவிலேயே இச்சேதத்துக்கான காரணியை எடுத்து வந்த வெங்காய பயிரின் மாதிரிகளை நுணுக்குக்காட்டியினுதவியுடன் ஆராய்ந்து அறிந்து கொண்டோம். விளைவு கொஞ்சம் விபரீதமானது தான். ஆனால் உடன் எம்மினிய விவசாய பெருமக்களுக்கு அறிவித்தேயாக வேண்டும். அடுத்த நாள் மீண்டும் இங்கு நடந்திருக்கின்றது. ஒன்றல்ல இரண்டல்ல ஆறு வேறு வேறு பூஞ்சணங்களின் தொற்று ஏற்பட்டு அவையனைத்தும் சேர்ந்து இப்பாரிய சேதத்தை தோற்றுவித்திருக்கின்றன. இதனால்தான் என்னவோ, விவசாயிகள் ஒன்றுக்கு மேல் இன்னொன்றாக இருக்கின்ற இரசாயனப் பீடை நாசினிகளை அவரவர் வசதிக்கேற்ப விசிறியதாக எமக்கு தெரியப்படுத்த முடிந்தது.



இம்மாதம் வழமைக்கு மாறாக பெய்த மழை இவ்வழிவுக்கு மூலகாரணம். ஆனால் இதனை கட்டுப்படுத்தவோ மாற்றியமைக்கவோ எம்மால் முடியாது. காலநிலை மாற்றத்தைப் பற்றி இன்னமும் பேசிக் கொண்டிருப்பதுவும் மாநாடுகளை நடத்துவதற்கும் இதுதானே காரணம்.

மிகவும் அனுகூலமான காலநிலையாக தற்போது இருப்பது வெங்காயப் பயிரில் அதிகரித்த நோய்த்தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

வெங்காயப் பயிரில் தொற்றுதலாகி சேதத்தையேற்படுத்தியிருக்கும் பூஞ்சணங்களை கீழே தருகின்றோம்.

1.கீழ் துகள் பூஞ்சணம்: இதனை ஆங்கிலத்தில் Downey Mildew என அழைப்பர். இதனை பெரனோஸ்போறா டெஸ்ரக்ரர் (Peronospora Destructor) எனும் பூஞ்சணம் ஏற்படுத்துகின்றது.

2. மேல் துகள் பூஞ்சணம்: இதனை ஆங்கிலத்தில் Powdery Mildew என அழைப்பர். இப்பூஞ்சணத்தை லெவியுலுலா ரோறிக்கா (Leveillula Taurica) எனும் பூஞ்சணம் ஏற்படுத்துகின்றது.

3. இலை சுருளல் நோய்: இதனை கொலற்றோரைக்கம் (Colletotrichum) எனும்

மாறியுள்ள காலநிலையினூடாக வெங்காய செய்கையில் செய்துள்ள சில பயிர்ச் செய்கை முறைகளும் இப்பூஞ்சணங்களின் விருத்திக்கு ஏதுவாகியிருந்துள்ளன. வெங்காய பயிருக்கிடையிலான ஈரப்பதன், குறைந்த வெப்பநிலை, வேகமான காற்று இவையனைத்தும் இப்பூஞ்சணங்களின் விருத்திக்கு சாதகமான காரணிகளாகும்.

இவ்வாறான சூழ்நிலை இனியும் ஏற்பட வாய்ப்புள்ளதனால்இப்பூஞ்சண நோய்களை மேலும் விருத்தியடையவிடாமல் பார்த்துக் கொள்வது முக்கியமானது.

அதிகரித்த யூரியா பாவனை வெங்காய தாள்களை திரட்சியடையச் செய்து நிலத்துக்கு மேலான இலைப்பகுதி திரண்டு விருத்தியடைந்ததால் நோயெதிர்ப்பு தன்மையை இழந்திருக்கின்றன. இதனால் இலகுவில் பூஞ்சண தொற்று ஏற்பட்டிருக்கின்றது.

அடர்த்தியாக நடப்பட்ட வெங்காயப் பயிரினால் பயிரடர்த்தி அதிகமாயிருக்க அது இப்பூஞ்சணங்களுடைய விருத்திக்கு சாதகமாக இருக்கின்றது.

நீர்பாய்ச்சும் போது நீர்பாய்ச்சும் இடைவெளியைக் குறைத்ததனால் ஈரப்பதன் அதிகமாகவே இருக்கின்றது. இதுவும் இன்னொரு காரணம்.

இதற்கும்மேலாக விதைவெங்காயம் பெற்ற இடங்களில் இந்நோய்கள் இதற்கு முன்பே இருந்திருக்க வேண்டும். பாரிய அளவில் இல்லாவிட்டாலும் கூட சிறியளவிலோ அல்லது கண்ணுக்கு தென்படாமலும் இருந்திருக்கலாம். மேலும் இங்கு உற்பத்தியாகும் வெங்காயத்தை மீண்டும் நடுகைக்காக தெரிவு செய்வதாயின் நோயேற்படாத விளை நிலத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதற்காக விதை வெங்காயம் விளையும் இடத்தையும் முன்கூட்டியே கண்காணித்து கொள்வது நல்லது.

அடுத்த முறை (ஜனவரி மாதத்தில்) பயிரிடைவெளியைக் கூட்டி, யூரியா பசளையின் அளவைக் குறைத்து வேகமாக அடிக்கும் காற்றை கட்டுப்படுத்த மறைப்புக்களை வைத்திருத்தல் என்பன பரிந்துரைக்கப்படுகின்றன. இந்நோய்த்தாக்கத்திற்குள்ளான பயிரின் மீதிகளனைத்தையும் குறிப்பாக வெங்காய தாள்கள், அழுகிய குமிழ்கள் அனைத்தையும் சேகரித்து எரிப்பதோ அல்லது குழியினுள் ஆழப் புதைப்பதோ நல்லது. வேறு ஒருவித்திலைப் பயிர்களான குரக்கன், தினை, சாமை, இறுங்கு, நெல் என்பன வற்றைபயிர் சுழற்சி முறையில் வளர்ப்பது பூஞ்சணங்களின் வீரியத்தை குறைத்து விடும்.

பூஞ்சண நாசினிகளை கண்டபடி தெளிக்க வேண்டாம். மான்கோசெப் மற்றும் மெற்றலக்சையில் வகை இரசாயனங்கள் இணைந்த றெடொக்சில் ஓரளவிற்கு கீழ்துகள் பூஞ்சணத்தை கட்டுப்படுத்தும். முன்பு இதற்காக றிடோமில் எனும் சிறந்த பூஞ்சண நாசினி இருந்தது. விவசாயிகளின் அதீத பயன்பாட்டால் இதை தடைசெய்துள்ளனர். ஊதா தொப்புள புள்ளிகளுக்கு ஹோமாய் நாசினி கட்டுப்படுத்தும் அன்றக்கோல் எனும் பூஞ்சண நாசினியும் ஓரளவுக்கு இப் பூஞ்சணங்களைக் கட்டுப்படுத்தும். எந்தவகை பூஞ்சண நாசினியைப் பரிந்துரைக்க வேண்டும்.

இன்னும் பக்றீரியா வைரசு நோய்க் காரணிகளும் வெங்காயத்தைப் பாதிப்பனவாகினும் தற்சமயம் இவற்றினால் அதிக சேதமில்லாது இருப்பது நன்று எனவே கூறலாம். பயிர்களுக்கிடையே எதிர்ப்பு சக்தியைத் தூண்டரைக்கோடேர்மா பூஞ்சணத்தை பயன்படுத்துவது சிறந்தது. இதனை கிராம மட்டத்தில் உற்பத்தி செய்து பயன்படுத்த வழிசெய்ய முனைகிறோம். வந்தபின் அங்கலாய்ப்பதைவிட வருமுன் காப்பதே சிறந்தது.



வடமராட்சி வலயக்கல்வி பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான 19 வயது பிரிவினருக்கான கரப்பந்தாட்ட போட்டியில் நேற்று முன்தினம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. முறையே பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் அணி முதலாம் இடத்தையும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி இரண்டாம் இடத்தையும் பருத்தித்துறை சென். தோமஸ் றோ.க.த.க. பாடசாலை அணி மூன்றாம் இடத்தையும் பெற்றனர். இதில் மூன்று இடங்களையும் பெற்ற அணியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :-எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாரத்தில் யாழில் 178 பேர் கைது!

## பிரதி பொலிஸ்மா அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த வாரத்தில் 178 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவித்தார்.

இவ் 178 பேரில் பெரும்பாலானோர் குற்றவாளிகள் என இனங்காணப்பட்ட பின்னரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இவர்களில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் இருந்து 127 பேரும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் இருந்து 49 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அவற்றில் நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 47 பேரும் திருட்டில் ஈடுபட்ட 11 பேரும் சிறு தவறுகளில் ஈடுபட்ட 61 பேரும் வீதி விபத்துக்களினை ஏற்படுத்திய 6 பேரும் பிறருக்கு அடித்து காயம் ஏற்படுத்திய 34 பேரும் மதுபோதையில் கலகம் விளைவித்த 9 பேரும் மதுபோதையில் வாகனம் செலுத்திய 8 பேரும் சட்டவிரோதமாக வெளிநாட்டு நாணயத்தாள்கள் வைத்திருந்த 2 பேரும் சூழல் மாசடைவினை ஏற்படுத்திய அல்லது டெங்கு நுளம்பு பெருகும் விதமாக சூழலினை வைத்திருந்த 8 பேரும் பாதுகாப்புக்கோரி 2 பேரும் கொலைச் சந்தேகத்தில் 2 பேரும் சட்டவிரோத சாராய விற்பனையில் ஈடுபட்ட 2 பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதோடு சிலர் சரணடைந்தும் உள்ளதாக அவர் தெரிவித்தார். (செ-4)

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு நாளை அடிக்கல் நாட்டப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அச்சுவேலியில் அமைக்கப்படவுள்ள கைத்தொழில் பேட்டைக்கான அடிக்கல்நாட்டு விழாவும் ஒப்பந்தங்களை கைச்சாத்திடலும் மற்றும் ஒப்பந்தக்காரர்களை கட்டுமானப் பணிகளுக்காக இணைத்தலுக்குமான நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை கடந்த 1970 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அச்சுவேலியில் 65 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டு கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

கடந்த காலங்களில் நிலவிய யுத்த சூழ்நிலையின் காரணமாக இக்கைத்தொழில் பேட்டை சேதமடைந்திருந்தது. இந்திய அரசின் சிறு நன்கொடை அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டதோடு இலங்கை அரசாங்கமும் 25 மில்லியன் ரூபாவை வழங்கியது. இந்த கைத்தொழில் பேட்டையை மீள அமைப்பதற்கு இந்திய அரசின் அபிவிருத்தி திட்டத் தின் கீழ் காணித்துண்டுகளை அபிவிருத்தி செய்தல், உள்ளகப் பாதைகளை அமைத்தல், உள்ளக ஒளி அமைப்பு, நீர் வசதிகள், தீயணைப்பு முறைகள் என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் இலங்கை அரசாங்கத்தின் நிதி உதவியுடன் கண்ணிவெடி அகற்றல், நிலத்தை சுத்தம் செய்தல், மண் பரிசோதனை, நீரின் தரப் பரிசோதனை, இரு ஆழ் கிணறுகளைத் துப்புரவு செய்தல், ஆரம்ப கட்ட சூழல் பரிசோதனை, நிர்வாகக் கட்டடப் பணிகள் மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகள் என்பன விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் கைத்தொழில் பேட்டையின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக நிர்வாகக் கட்டடமொன்றும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இக்கைத்தொழில் பேட்டையில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக 61 பேர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளாக எல்லைச் சுவர் அமைத்தல், வேலியிடல், கதவுகள் மற்றும் நுழைவாயில் என்பனவற்றை அமைத்தல், உள்ளக வீதி வலையமைப்பு, பிரதான நீர் விநியோகத் தொகுதி, சேவைக் கட்டடம், வெளிவாரிச் சேவைகள், நீர்த்தாங்கிகள், கழிவு நீர்த்தொகுதி, தீ மற்றும் நீர் பாதுகாப்பு முறைகள் என்பன உள்ளடங்குகின்றன.

இந்த வருடம் ஆகஸ்ட் மாதக் காலப்பகுதியில் கைத்தொழில் பேட்டையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கைத்தொழில் பேட்டை ஊடாக சுமார் 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# துணுக்காய் பிரதேச சபையின்

## அட்டவணைப்படுத்தப்படாத வெற்றிடங்களை நிரப்புதல் - 2013

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01ஆம் திகதி முதல் துணுக்காய் பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08ஆம் திகதிய NP/05/01/GE6/UNS/RQ இலக்க கடிதத்திற்கமைவாகவும், கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின்கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### சேவை நிபந்தனைகள்

1. இப்பதவி நிரந்தரமானதும்,ஓய்வூதியத்திற்குரித்துடையதும் ஆகும்.
2. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்

### அடிப்படைத் தகைமைகள்

1. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதி அன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் , 45 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல்வேண்டும்.ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களை கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர்வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.
3. நன்னடத்தை உடையவராகவும்,சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி துணுக்காய் பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினை கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்)
5. தொழில்நுட்பம்சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பாக ஆழ்ந்த அறிவும் மற்றும் செயன்முறை அனுபவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

### தெரிவு செய்யப்படும் முறை

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை குழுவினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

### விண்ணப்பிக்கும் முறை

1. துணுக்காய் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா இருபதைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்காதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்
2. விண்ணப்பத்தில் உரிய முறையில்தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு **செயலாளர், துணுக்காய் பிரதேச சபை, துணுக்காய்** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்
3. தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்
4. ஆட்சேர்ப்பு திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்தின் பின்னரோ நியமனத்தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிராகரிக்கப்படும்.

### விண்ணப்ப முடிவுத் திகதி

*2013.03.07 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல்வேண்டும்*

### பதவிகள்

1. காரியாலய காரிய சகாயர் பதவி (வெற்றிடம் -02)
2. நூலக பரிசாரகர் பதவி (வெற்றிடம் -01)
3. வேலை வெளிக்களத் தொழிலாளி பதவி (வெற்றிடம் -03)
4. சுகாதாரத் தொழிலாளி பதவி (வெற்றிடம் 05)

**கல்வித் தகைமை** : கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கும் மேற்படாத அமர்வுகளில் தமிழ்/சிங்களம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு(06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

**சம்பளம்**

*2007.08.24 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006(IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-1-2006-A ஆகும்.*

05. மின்னிணைப்பாளர் பதவி (வெற்றிடம் -01)
06. ஆயுள்வேத மருந்தாளர் (வெற்றிடம் -01)

**கல்வித் தகைமை:**

1. கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ்/சிங்களம்உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு(06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. தொழில் சார் தகைமை
3. இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்பஇறுதித் திகதியன்று கல்வித்தகமையுடன் ஆறுமாதங்களுக்கு குறையாத வகையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

2007.08.24 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006(IV)இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-2-2006-A ஆகும்

8. சாரதி பதவி (வெற்றிடம்-02)

**கல்வித் தகைமை :** கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தமிழ் /சிங்களம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு(06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**ஏனைய தகைமைகள்**

1. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை/ தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்கு குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தை விண்ணப்ப இறுதித் திகதிக்கு மூன்று (03)வருடத்திற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
2. மோட்டார் வாகனச் சாரதியாக மூன்று (03)வருட அனுபவத்திற்கான சான்றிதழ்
3. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5 அடி 2 1/2 அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல்வேண்டும்.
4. விண்ணப்பதாரி இரவு, பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல் உறுதியைக் கொண்டதுடன், சிறந்த கண்பார்வையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
5. பெருந்தெரு விதிமுறை பற்றிய சிறந்த அறிவைக் கொண்டிருத்தல்வேண்டும்.

**சம்பளம்**

*2007.08.24ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.06/2006(IV)இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-3-2006-A ஆகும்.*

**மு.கிருஸ்ணாவரத்தினராசா,**
செயலாளர், பிரதேசசபை. துணுக்காய்.

(சி-2498)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமானமற்ற முறையில் அரசு போரை நடத்தியுள்ளது

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

வன்னி யுத்தத்தின்போது இலங்கை அரசாங்கம் மனிதாபிமானமற்ற முறையிலும் நடந்துள்ளது என்பதை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் மரணம் வெளிப்படுத்தியுள்ளது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தம் நடைபெற்றபோது விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்டுள்ளமை தொடர்பான புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

இந்த புகைப்படங்களில் உணவைக் கொடுத்து அந்தச் சிறுவனைப் படுகொலை செய்த செயல் வன்னியில் அரசாங்கத்தின் காட்டுமிராண்டித்தனத்தை சுட்டிக்காட்டியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (செ-2)

# இத்தாலிக்கு அனுப்புவதாக கூறி 50 இலட்சம் ரூபா பணமோசடி

(யாழ்ப்பாணம்)

இத்தாலி நாட்டிற்கு அனுப்புவதாக கூறி 50 இலட்சம் ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. இவ் ஏமாற்றுச் சம்பவம் கடந்த 16 ஆம் திகதியன்று சுழிபுரம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

சுழிபுரத்தினை சேர்ந்த நபரொருவரிடமே இவ்வாறு ஏமாற்று வேலை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தாம் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளதாகவும் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்ன தெரிவித்தார்.

மேலும் நீதிமன்றிலும் இது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதாகவும் அவர் கூறினார். (செ-4)

# மக்களைப் பாதுகாப்பதே பொலிஸாரின் நோக்கம்

## புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள மக்களினை பாதுகாப்பதே பொலிஸாரின் நோக்கம் என யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக புதிதாக பதவியேற்றுள்ள இந்து கருணாரத்ன தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அச்சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் பெரும்பாலானோர் பொலிஸாரினை எதிரியாகவே பார்க்கின்றனர். இந்நிலைப்பாடு தவறானதாகும். பொலிஸார் மக்களுக்காகவே செயற்பட்டுவருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் நான் பதவியேற்றுள்ள நிலையில் முதற்கட்ட நடவடிக்கையாக போக்குவரத்து சம்பந்தமாக சோதனைகளை நடத்தவுள்ளேன்.

அவற்றில் குடிபோதையில் வாகனம் செலுத்துபவர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

பாடசாலை மாணவர்கள் முதற்கொண்டு சமாந்தரமாக துவிச்சக்கர வண்டியில் வீதியில் செல்பவர்கள் கைது செய்யப்படுவார்கள். இவ்வாறு அனைத்து போக்குவரத்து விதிமுறைகளும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

அவ்வாறின்றி அவற்றினை மீறி நடப்போர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முற்படுத்தப்படுவர். எனினும் நாம் தமிழர்களின் கலாசாரத்தின் பொருட்டு சில சட்ட விதிமுறைகளினையும் தளர்த்தியுள்ளோம்.

பெண்கள் ஒரு பக்கமாகவிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்தல், பெண்கள் கோவிலுக்குச் செல்லும்போது தலைக்கவசம் (ஹெல்மட்) அணியாமல் செல்லுதல் போன்றவை தளர்த்தப்பட்டுள்ளன. மக்கள் வீதி ஒழுங்கு முறைகளினை கடைப்பிடித்து அதற்கேற்ப நடத்தல் வேண்டும்.

வீதிகளில் ஆபத்தான இடங்கள் என பொதுமக்கள் இனங்கண்டால் அதனை பொலிஸாராகிய எமக்கு அறிவிக்க முடியும். என்றார் அவர். (செ-4)

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஜப்பான் ஆதரிக்க வேண்டும்!

## ஜப்பான் தூதுவரிடம் டெசோ வேண்டுகோள்

ஜெனீவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழுக்கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் தீர்மானத்தை ஆதரித்து ஜப்பான் வாக்களிக்க வேண்டும் என்று அந்நாட்டு துணைத் தூதர் ஒசுகாவிடம் தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பு (டெசோ) சார்பில் வலியுறுத்தப்பட்டது.

டில்லியில் தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு இல்லத்துக்கு ஜப்பான் துணைத்தூதர் ஒசுகா கடந்த வியாழக்கிழமை சென்றார்.

அப்போது பாலுவுடன் டெசோ அமைப்பில் இடம்பெற்றுள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவனும் உடனிருந்தார்.

இதன்போது டெசோ அமைப்பின் நோக்கம் குறித்தும் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக அந்த அமைப்பு நடத்திவரும் பிரசாரம், போராட்டங்கள் குறித்தும் ஒசுகாவிடம் பாலுவும் திருமாவளவனும் விளக்கினர்.

ஜெனீவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வருவதாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அறிவித்துள்ளதால் அத் தீர்மானத்தை ஜப்பான் ஆதரிக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

அதைத் தொடர்ந்து டெசோ தீர்மானம் குறித்தும் அந்த அமைப்பின் வேண்டுகோள் குறித்தும் ஜப்பான் அரசுக்கு தெரிவிக்கப்படும் என்று ஒசுகா கூறினார்.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பாலு, டெசோ அமைப்பின் தீர்மான நகல்களை தொடர்ந்து டில்லியில் உள்ள ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகள் பிரதிநிதிகளிடம் கொடுப்போம். டெசோ அமைப்பின் கருத்தரங்கு டில்லியில் எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம் திகதி நடைபெறுகிறது. அதில் பா.ஜ.க மூத்த தலைவர் வெங்கய்ய நாயுடு, ஐக்கிய ஜனதா தள தலைவர் சரத்யாதவ், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், சமாஜ்வாதி கட்சி தலைவர் முலாயம் சிங் யாதவ், ராஷ்டிரிய ஜனதா தள தலைவர் லாலு பிரசாத் யாதவ், லோக் ஜனசக்தி தலைவர் ராம் விலாஸ் பாஸ்வான் ஆகியோர் பங்கேற்பர் என எதிர்பார்க்கிறோம்.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா முன்மொழிய வேண்டும் என்று தி.மு.க தலைவர் கருணாநிதி குரல் கொடுத்து வருகிறார். பிரதமரை சந்தித்து தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த கோரிக்கையை வலியுறுத்த உள்ளனர் என்று கூறினார். (செ-2)

# புதிய நிர்வாக தெரிவு

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செட்டிக்குள பிரதேச இளைஞர் சம்மேளன புதிய நிர்வாகத் தெரிவுக்கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இதன்படி புதிய தலைவராக எஸ்.நிருஜனும் செயலாளராக ஞா.ஞானசௌந்தரியும் பொருளாளராக சசிகுமாரும் அமைப்பாளராக கே.கிரிதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிர்வாக தெரிவு கூட்டத்தில் செட்டிக்குளம் பிரதேச செயலர் நா.கமலதாசன், வவுனியா மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் எஸ்.எம்.சிசிர செனவிரத்ன ஆகியோரும் 26 இளைஞர் கழகங்களை சேர்ந்த 78 இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். (செ-5)


# மரண அறிவித்தல்



## வாணி - தயாநிதி

கூவில், புலோலிமேற்கு , புலோலியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Hayes end road, Hayes middlesey, UB 48 EJ, London இனை வசிப்பிடமாகவும் கொண்ட வாணி தயாநிதி 13.02.2013 இல் காலமானார்.

அன்னார் சந்திரசேகரம் தயாநிதியின் அன்பு மனைவியும், சிவசண்முகம் ( ஓய்வு பெற்ற கிராம அலுவலர்) மதிவதனியின் அன்பு மகளும், சந்திரசேகரம் தனபாக்கியம் ஆகியோரின் மருமகளும், சர்மிகா , சஞ்சாய் , சயனிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஷ்ணன் ( பிரான்ஸ் ), துளசி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கிருஷ்ணராசா (லண்டன்), தயாபரன் , ராதாகிருஷ்ணன் ( பிரான்ஸ் ) ராஜினி , தயாளினி ஆகியோரின் அண்ணியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.02.2013 ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார் , உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

0044 208 7076728 (லண்டன்), 021 226 0207(இலங்கை)


# ஆலைகள் நடத்துவோருக்கான இலவச பயிற்சி வகுப்புக்கள்

(சிவநகர்)

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் சர்வதேச தொழிலாளர் அமைப்பு பொருளாதார அபிவிருத்தி கருத்திட்டத்தின் ஊடாக மக்களை வலுவூட்டல் செய்யும் முகமாக நெல்பதனிடும் ஆலைகள் நடத்துவோருக்கான இலவச பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக நெல் பதனிடும் சிறு ஆலைகள் வைத்திருப்போருக்கான பயிற்சி நெறி நேற்று கிளிநொச்சி மாவட்ட வணிக கைத்தொழில் வேளாண் ஒன்றியத்தில் நடத்தப்பட்டது.

இதற்கு அடுத்தபடியாக நெல் பதனிடும் பெரிய ஆலை சொந்தக்காரர்களுக்கான பயிற்சி நெறியும் உழவியந்திரம், அதன் உப பகுதிகள், நெல் அறுவடை செய்யும் இயந்திரம், இவற்றுக்கான இயக்கும் முறை, பழுது பார்த்தல் சம்பந்தமான பயிற்சி நெறிகள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளன.

இதனால் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நெல் ஆலை சொந்தக்காரர்களும் விவசாயிகளும் நல்ல பயனை பெறக்கூடியதாக இருக்குமென விவசாயிகளாலும் பொதுமக்களாலும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-3-254)


# முதலாம் ஆண்டு நினைவுகளுடன்



தோற்றம்: 18.02.1943
மறைவு: 05.02.2012

அமரர்

## அண்ணாமலை முத்துத்தம்பி

கண்டிப்பைச் சொல்லில் வைத்து
கருணையினை நெஞ்சில் வைத்து
எம்மையெல்லாம் ஆளாக்கிய
எம் உயிர் தெய்வமே
ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறிடுமோ உம் நினைவு

ஊரெழு, உரும்பிராய்.

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
தம்பி சி.ஜெயக்கொடி

(சி-2496)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

செய்த குற்றத்தைத் தொடர்ந்து பயம் புறப்பட்டு வருகிறது. அதுவே அந்தக் குற்றத்திற்கு சரியான தண்டனை. -வால்டேர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழர்களுக்கு இந்தியா செய்த பழி தீர ஐ.நாவில் தோஷ நிவாரணம் செய்ய வேண்டும்

பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனை படையினர் தடுத்து வைத்திருந்த பின்னர் சுட்டுக் கொன்றனர் என்பது தொடர்பான ஆதாரங்களை சனல் 4 வெளியிட்டதை அடுத்து இந்திய நாடாளுமன்றத்தில் அமளிதுமளி ஏற்பட்டுள்ளது.

சிறுவன் பாலச்சந்திரன் கொல்லப்பட்டது தொடர்பான காட்சிகளை சனல் 4 தொலைக் காட்சி வெளியிட்டதும் அதன் தாக்கம் இந்திய தேசத்திலேயே அதிகமாக பிரதிபலிப்பதைக் காணமுடியும்.

பாலச்சந்திரன் கொல்லப்பட்ட காட்சி மட்டுமன்றி வன்னிப் போர் நிலைமைகளை சனல் 4 வெளியிட்ட போதெல்லாம் இந்திய தேசத்தில், இலங்கை அரசுக்கு எதிரான கோஷங்கள் எழுந்ததை மறுக்க முடியாது.

இலங்கையில் நடந்த சம்பவங்களுக்கு இலங்கையில் அல்லவா எதிர்ப்பு ஏற்பட வேண்டும்? ஆனால் இந்தியாவில் அல்லவா குழப்பம் ஏற்படுகின்றது.

இதுபற்றி யாரேனும் சிந்தித்தால் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் வகிபாகம் எத்தன்மையது என்பது உணரப்படும்.

பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் கொல்லப்பட்ட விடயங்களை சனல் 4 வெளியிட்டதை அடுத்து இந்திய நாடாளுமன்றக் கூட்டத் தொடரைக் கூட்ட முடியவில்லை எனில் இதனை யாரும் சாதாரண விடயமாகக் கருதிவிடக் கூடாது.

ஆம்! வன்னிப் போரில் இலங்கை அரசுக்கு உதவி வழங்கிய இந்திய மத்திய அரசு, தான் செய்தது பெரும் பிழை என்பதை உணரவைக்கின்ற சம்பவங்கள் இப்போது ஆரம்பமாகிவிட்டது.

இதற்கு முடிவு கட்ட வேண்டுமாயின், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதே இந்தியாவுக்கான ஒரே வழியாக இருக்கும்.

எனினும் இந்தியா உத்தரவிட்டால் இலங்கை செய்யும் என்ற சூழ்நிலை இப்போது இல்லை என்றாகிவிட்டது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் ஏற்பட்ட உறவு என்பது ஈழத் தமிழர்களுக்காக இந்தியா கதைப்பதை தடுப்பதற்காக இலங்கை அரசு கையாளும் மாற்றுவழியாகும்.

எனவே தமிழர்களுக்கு தீர்வைக் கொடு என்று சொல்லக் கூடிய வல்லமையைப் பறிகொடுத்த இந்தியா தனது நாட்டில் குழப்பம் ஏற்படுவதற்கும் வழியமைத்துவிட்டது.

ஆக; வன்னிப் போருக்கான உதவியை இந்தியா செய்ததன் காரணமாக தனது பகை நாடான சீனாவுடன் இலங்கை உறவு கொள்வதற்கும் கூடவே இந்திய தேசத்தின் ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்கும் வகையிலும் இந்தியா நடந்து கொண்டது.

இத் தீவினைப் பயன் கங்கையிலோ காசியிலோ நீராடித் தீரப்போவதில்லை.

மாறாக ஐ.நாவில் வைத்து மகா தோஷ நிவாரணம் செய்வதே இந்தியாவுக்கான ஒரே வழி.

# குறிகாட்டுவான் வீதியில் கலைபடும் பஸ்கள்! பயணிகள் திண்டாட்டம்

குறிகாட்டுவான் -யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் பஸ்கள் முன்னுக்குப்பின் போட்டி போட்டு ஓடுவதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டுள்ளனர்.

இவ்வீதியால் வடபிராந்திய போக்குவரத்துசபை பஸ்களும், தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுகின்றன.

தற்போது இறுப்பிட்டியில் தனியான சேவை ஒன்றையும் வட பிராந்திய போக்குவரத்துச்சபை ஆரம்பித்துள்ளது.

இந்தநிலையில் இருபஸ்களும் போட்டி போட்டு ஓடுவதுடன் பயணிகளை ஏற்றாது செல்வதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை பழுதடைந்த வீதியாகக் காணப்படும் புங்குடுதீவு முதல் பண்ணை வீதி வரையான பகுதியில் வாகனங்கள் வேகமாக ஓடுவதால் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் பயணிகள் முறையிட்டுள்ளனர்.

## தொழில்நுட்ப அலுவலர் பரீட்சை இன்று

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்ப அலுவலர்களுக்கான வாய்மூலமான பரீட்சை இன்று காலை 9 மணிக்கு யாழ்.ரில்கோ ஹோட்டலில் இடம்பெறும் என யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத் தலைவர் செ.ரமணன் தெரிவித்துள்ளார். (எ-11)

## பள்ளிவாசல் மீது தாக்குதல்

காலி, ஹிரும்புரை முஹிதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் மீது நேற்று அதிகாலை 2 மணியளவில் இனம்தெரியாத சிலர் கற்களால் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதலினால் பள்ளிவாசலின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தாமதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், காலி மாவட்ட பிரதம பொலிஸ்மா அதிபரைத் தொடர்புகொண்டு உடனடியாக இத்தாக்குதல் குறித்து விசாரணை நடத்துமாறும், பள்ளிவாசல் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் கேட்டுள்ளனர்.

பொலிஸார் இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# கொழும்பு கம்பன் கழகத்தின் மூன்றாம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் கம் பன் விழா 2013 இன் 3 ஆம் நாள் நிகழ்வு கள் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவு ள்ளது.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில் இடம்பெற்றுவரும் இவ்விழா இன்று முற்ப கல் 9.30 மணிக்கு புதிய கதிரேசன் ஆலய அறங்காவலர் எஸ். சுப்பிரமணியம் தம்பதியரால் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்நாள் விழா தலைமையுரையினை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வழங்கவுள்ளதோடு தொடக்கவுரையினை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் த.முத்துக்குமாரசாமி வழங்கவுள்ளார்.

தொடர்ந்து எம்.சரவணன் தலைமையில் இடம்பெறும் **சொல்லுக்குள் வாக்கியங்கள்** என்ற கருப்பொருளில் இடம்பெறும் கருத்தரங்கத்தில் **விளையாட்டு** என்ற தலைப்பில் திருமதி விசாலாட்சி, **தடவியதோ** என்ற தலைப்பில் ச.மார்க்கண்டு, **மறுப்பனோ** என்ற தலைப்பில் ரி.ரெங்கராஜா, **ஐயோ!** என்ற தலைப்பில் திருமதி எஸ்.பிரேமா, **சுடுவேன்** என்ற தலைப்பில் த.இராமலிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் 5.30 மணிக்கு ஸ்ரீமயூராபதி தேவஸ்தான அறங்காவலர் பெ.சுந்தரலிங்கம் தம்பதியரின் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது தலைமையுரையினை சைவமங்கையர் கழகத் தலைவர் திருமதி சிவானந்தி துரைசாமியும் தொடக்கவுரையை இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கோதை நகுலராஜாவும் வழங்கவுள்ளனர்.

மாலை நிகழ்வுகளாக சிதம்பரப்பிள்ளை சிவகுமார் தலைமையேற்று நடத்தும் **அடிகள் தந்த அடிகள்** என்ற கருப்பொருளிலான கவியரங்கம் இடம்பெறும். இக்கவியரங்கில் **மாதென்று எண்ணுவதோ** என்ற தலைப்பில் ச.முகுந்தன், **போர் ஒடுங்கும்** என்ற தலைப் பில் த.ஜெயசீலன், **ஒருவனைத் தந்திடுதி** என்ற தலைப்பில் ஸ்ரீ.பிரசாந்தன், **அன்பின் நல்லதோர்** என்ற தலைப்பில் த.சிவசங்கர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் இடம்பெறும் **கொடிய தீயன் யார்** என்ற கருப்பொருளில் இடம்பெறும் இலக்கிய ஆணைக்குழு நிகழ்வு இடம்பெறும். இந்நிகழ்வில் **கைகேயியே!** என்ற தலைப்பில் திருமதி சு.விசாலாட்சியும் **கூனியே!** என்ற தலைப்பில் திருமதி எஸ்.பிரேமாவும் **சூர்ப்பனகையே!** என்ற தலைப்பில் செல்வி இரா.ருக்மணி ஆகியோர் கருத்துரை வழங் கவுள்ளனர்.

இவ்விழாவின் இறுதிநாள் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. (செ-5)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



எவரும் உங்களை இவ்வாறு சிருஷ்டிக்கவில்லை. அதிலும் நிச்சயமாக நான் செய்யவில்லை. மாறிக் கொண் டிருக்கும் காலத்தின் ஒரு பகுதியே இது.

மனது எழுகிறது. மனது அடங்குகிறது. சத்ய யுகத்தில் மனது ஒருவாறாக அமைதியாகிறது. ஏனைய யுகங்களில் அது திரும்பவும் வருகிறது.

கலியுகத்தில் மிகவும் பலம் கொண்டு வருகிறது. ஆகவே மனது அதிக பலம் கொண்டு இருக்கும் இந்த நேரத்தில் சுயநலம் கூட நிறைந்தே இருக்கும். அது இயற்கையே. மனது அடங்க சுயநலமும் அடங்கும்.

இது உங்களுடைய தவறோ, என் தவறோ அல்ல. நீங்களும் இதை விரும்பவில்லை. நானும் இதை விரும்பவில்லை. நானும் உங்களைப் போலவே (இந்த விடயத்தில்) எதுவும் செய்யாத நிஸ்சஹாய நிலையில் உள்ளேன்.

## 50இற்கும் மேற்பட்ட தம்பதியினருக்கு இலவச திருமண பதிவு ஏற்பாடு

(தும்பளை)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரால் வடமராட்சி கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 50 இற்கு மேற்பட்ட தம்பதியினருக்கு சட்ட ரீதியான திருமணப் பதிவு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு துன்னாலை கலிகை கந்தன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை வடமராட்சி லயன்ஸ் கழக தலைவர் லயன்ஸ் சி.பத்மநாதன் தலைமை தாங்கி நடத்தவுள்ளார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவஸ்ரீ கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் கிராம அலுவலர்கள் எஸ். ஸ்ரீரங்கநாதன், பி.லலித் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். சட்டரீதியாக திருமணப்பதிவை மேற்கொள்ளாது திருமணம் செய்து கொண்ட 50 இற்கு மேற்பட்ட தம்பதியினருக்கு சட்ட ரீதியிலான திருமணப்பதிவு மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-5-19)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### நம்மால் சாதிக்கமுடியும்!



✦ நீங்கள் எந்தச் செயலைச் செய்தாலும் அதன் பொருட்டு மனம், இதயம், ஆன்மா இந்த மூன்றையும் அர்ப்பணித்து விடுங்கள்.

✦ உயர்ந்த இலட்சியம் கொண்டவன் ஆயிரம் தவறு செய்தால் இலட்சியம் இல்லாதவன் ஐம்பதாயிரம் தவறுகளைச் செய்வான்.

✦ நாம் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். புனிதமும் பூரணத்துவமும் கொண்டவர்கள். மகத்தான செயல்களைச் செய்வதற்காகவே ஆண்டவன் நம்மைப் படைத்திருக்கிறான். அவற்றை நாம் விரைந்து செய்து முடிப்போம்.

✦ நல்ல எண்ணங்களின் கருவிகளாக்கிக் கொள்ளும் முயற்சியில் மனதை எப்போதும் ஈடுபடுத்துங்கள்.

✦ சரியான வழியில் செலுத்தப்பட்ட மனம் நம்மைக் காக்கும். இறுதியில் நம்மை விடுதலை பெறச் செய்யும்.

✦ தூய உள்ளம் படைத்தவர்கள் அதிகமானால் இந்த உலகமும் தூய்மை பெற்றதாக மாறிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் இன்னிங்ஸ் ஆஸி. 316/7



இக்காட்டன நிலையில் இருந்த அவுஸ்திரேலிய அணியை மீட்டெடுத்த அணித் தலைவர் மைக்கல் கிளார்க் சதத்தைப் பூர்த்தி செய்த பின்னர்....

சென்னை சேப்பாக்கம் சிதம்பரம் விளையாட்டரங்கில் இடம்பெற்று வரும் இந்தியாவுடனான முதலாவது டெஸ்ட்போட்டியில் .முதல் இன்னிசுக்காக துடுப்பெடுத் தாடிவரும் அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 316 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்திய அணியின் சுழல் பந்துவீச்சாளர் அஸ்வின் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

தொடக்க வீரர்களாக கோவனும் வோர்னரும் களமிறங்கினர். இருவரும் மிக நிதானமாக துடுப்பெடுத்தாடினர். அவுஸ்திரேலிய அணி 64 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் கோவன் 29 ஓட்டங்களுடன் (45 பந்துகளில்) ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த ஹியூஸ் 6 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்க அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 72 ஓட்டங்களுடன் தடுமாறியது.

பின்னர் வந்த வொட்சன் களத்தில் தொடர்ந்து நின்ற வோர்னருடன் இணைந்தார். இருவரும் இணைந்து 50 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 34.4 ஆவது ஓவரில் அவுஸ்திரேலிய அணி 126 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் வொட்சன் ஆட்டமிழந்தார்.

வொட்சனைத் தொடர்ந்து அணித் தலைவர் கிளார்க் களத்துக்கு வந்தார். கிளார்க்கும் வோர்னரும் இணைந்து கூடுதலாக 5 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வோர்னர் ஆட்டமிழந்தார். 93 பந்துகளை சந்தித்த வோனர் 59 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து கிளார்க்குடன் வேட் கைகோர்த்தார். அவர் நீண்ட நேரம் நிலைத்து ஆடவில்லை. 35 பந்துகளை எதிர்கொண்டு 12 ஓட்டங்களை மாத்திரம் பெற்றார். 47 ஆவது ஓவரில் அவுஸ்திரேலியா அணி 153 ஓட்டங்களைப் பெற்று ஐந்து விக்கெட்டுக்களை இழந்து ஓர் இக்கட்டான நிலையில் இருந்தது.

இந்நிலையில் கிளாக்குடன் சோடி சேர்ந்த ஹென்றிக்ஸ் சிறந்த இணைப்பாட்டம் ஒன்றை அவுஸ்திரேலிய அணிக்கு வழங்கினார். 254 பந்துகளில் 151 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தது இந்த சோடி. ஹென்றிக்ஸ் 68 ஓட்டங்களுடன் வெளியேற தொடர்ந்து வந்த ஸ்ராக் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 316 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

களத்திலே அணித் தலைவர் கிளாக் ஆட்டமிழக்காமல் 169 பந்துகளை சந்தித்து 103 ஓட்டங்களுடனும், சிடில் 1 ஓட்டத்துடனும் உள்ளனர்.

பந்துவீச்சில் 30 ஓவர்கள் பந்து வீசி 88 ஓட்டங்களைக் கொடுத்து முதல் ஆறு விக்கெட்டுக்களையும் அஸ்வின் வீழ்த்த. ஜடஜா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

நேற்றைய போட்டியில் 100 ஆவது டெஸ்டில் விளையாடும் சுழல் நாயகன் ஹர்பஜன் சிங் எந்தவித விக்கெட்டுக்களையும் கைப்பற்றவில்லை.

# ஆஸி-இந்தியா டெஸ்ட் சமர்; ஓர் மீளாய்வு!

*இந்தியா, அவுஸ்திரேலிய அணிகளிடையே இதுவரை 82 டெஸ்ட் போட்டிகள் நடந்துள்ளன. இவற்றில் இந்தியா 20 போட்டியிலும், அவுஸ்திரேலியா 38 போட்டியிலும் வென்றுள்ளன. 23 போட்டிகள் சமநிலையில் முடிந்துள்ளன.*

- ✔ அவுஸ்திரேலியாவில் நடந்த 40 டெஸ்டில் அந்த அணி 26 முறையும், இந்தியா 5 முறையும் வென்றுள்ளன. 9 போட்டிகள் சமநிலையாகியுள்ளன.
- ✔ இந்தியாவில் நடந்த 42 டெஸ்டில் இந்தியா 15 போட்டியிலும் அவுஸ்திரேலியா 12 போட்டியிலும் வென்றுள்ளன. 14 போட்டிகள் சமநிலையில் முடிந்தன.
- ✔ இந்தியா அதிகபட்சமாக 7 விக்கெட் இழப்புக்கு 705 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. (சிட்னி, 2004). ஆஸி. அணியின் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை 674 (அடிலெய்டு, 1948).
- ✔ இந்திய அணியின் குறைந்தபட்ச ஓட்டம்- 58 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தமை (1947 பிரிஸ்பேன் டெஸ்ட் 2வது இன்னிங்ஸ்).
- ✔ ஆஸி. அணி 1981 மெல்போர்ன் டெஸ்டில் 83 ஓட்டங்களுக்கு சுருண்டுள்ளது.
- ✔ ஆஸி. அணிக்கு எதிராக சச்சின் 35 டெஸ்டில் விளையாடி 3438 ஓட்டங்கள் (அதிகம் 241*, சராசரி 57.30, சதம் 11, அரை சதம் 15) விளாசியுள்ளார்.
- ✔ பொன்டிங் 29 டெஸ்டில் 2555 ஓட்டங்கள் (அதிகம் 257, சராசரி 54.36, சதம் 8, அரை சதம் 12) எடுத்துள்ளார்.
- ✔ பந்துவீச்சில் இந்தியாவின் அனில் கும்ப்ளே 20 டெஸ்டில் 111 விக்கெட் சாய்த்துள்ளார் (ஹர்பஜன் 16 டெஸ்டில் 90 விக்கெட்). ஆஸி. தரப்பில் பிரெட் லீ 12 டெஸ்டில் விளையாடி 53 விக்கெட் எடுத்துள்ளார்.

# ஹைதராபாத் குண்டுவெடிப்பின் எதிரொலி!

## 3 அடுக்குப் பொலிஸ் பாதுகாப்பு; தீவிர சோதனையில் ரசிகர்கள் !

இந்தியா- அவுஸ்திரேலிய அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி 5 நாட்கள் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறுகிறது. வீரர்களுக்கான தங்குமிட வசதி சென்னை தாஜ் ஹொட்டலில் ஒதுக்கப்பட்டுள்ளது.

வீரர்கள் தங்கி உள்ள பகுதிக்கு மற்றவர்கள் யாரும் செல்ல முடியாது. தாஜ் ஹொட்டலை சுற்றி பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அந்த ஹொட்டலுக்கு வரும் வாகனங்கள் பலத்த சோதனைக்குப்பிறகே அனுமதிக்கப்படுகின்றன. புதிதாக ஹொட்டலில் தங்குவதற்கு யாருக்கும் அனுமதி இல்லை. வீரர்கள் சாப்பிடும், சாப்பாடும் பலத்த சோதனைக்கு பிறகே வீரர்களுக்கு பரிமாறப்படுகிறது.

### 2 ஆயிரம் பொலிஸார் குவிப்பு

பேர்ட்டி நடைபெறும் சேப்பாக்கம் மைதானத்திலும் 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பாதுகாப்பு பணிக்காக 2 ஆயிரம் பொலீசார் குவிக்கப்படுகிறார்கள். போட்டியைக் காணும் ரசிகர்களும் பலத்த சோதனையின் பின்னரே மைதானத்திற்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

## கலக்கத்தில் அவுஸ்திரேலிய அணி வீரர்கள்

ஐதராபாத்தில் 3 இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்பால் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வரும் அவுஸ்திரேலிய அணி கலக்கம் அடைந்துள்ளது. இந்தியாவில் பாதுகாப்பு குறித்து அவுஸ்திரேலிய வீரர்கள் அச்சம் தெரிவித்து உள்ளனர்.

இதுபற்றி சென்னையில் அவுஸ்திரேலியா அணியின் தலைமை நிர்வாகி ஜேம்ஸ் சுதர்லாந்த் கூறுகையில், ஹைதராபாத் பற்றிய நிலவரங்களை நாங்கள் உன்னிப்பாக ஆராய்கின்றோம். அதற்காக அங்கு போவோமோ இல்லையா என்று சந்தேகப்பட வேண்டாம். குண்டுவெடிப்பு சம்பவம் கவலை அளிக்கிறது. அதே நேரத்தில் நாங்கள் இப்போது சென்னை போட்டிக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம். எங்கள் அணி வீரர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை உள்ளூர் நிர்வாகமும், இந்திய கிரிக்கெட் சபையும் அவுஸ்திரேலிய தூதரகமும் இணைந்து உயர்ந்த பாதுகாப்பு அளித்து வருகிறது. எங்களைப் பொறுத்த வரையில் திட்டமிட்டபடி ஹைதராபாத் போட்டியில் பங்கேற்போம் என்றார் அவர்.

# நிதானமாக ஆடுகிறது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. ஏற்கனவே இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று டெஸ்ட் தொடரையும் கைப்பற்றிய தென்னாபிரிக்க அணி 3 ஆவது போட்டியில் முதல் இன்னிங்சுக்காக 5 விக்கெட்டுக்களை இழந்து 201ஓட்டங்களைப் பெற்று துடுப்பெடுத்தாடி வருகின்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா 32 ஓட்டங்களில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை பறிகொடுத்து தடுமாறியது. ஸ்மித் 5 ஓட்டங்களுடனும், பீற்றர்சன் 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.


தொடர்ந்து வந்த அம்லா, டுபிளெசிஸ் நிதானமாக துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கைய உயர்த்த போராடினர். எனினும் இந்த ஜோடியும் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. 107 ஓட்டங்களைப் பெற்ற போது டுபிளெசிஸ் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து இணைநத வில்லியர்ஸ் அம்லாவுடன் இணைந்து 79 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். அம்லா 92 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பின் வந்த லேகர் 7 ஓட்டங்களைப் பெற்று வெளியேற தென்னாபிரிக்கா அணி 5 விக்கெடடுக்களை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றுதுடுப்பெடுத்தாடி வருகிறது.

# விளையாட்டுத் துளிகள்

- ✔ இந்திய அணி முன்னாள் நட்சத்திர வீரர் வி.வி.எஸ்.லஷ்மன் தற்போதைய டெஸ்ட் தொடரில் வர்ணனையாளராக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.
- ✔ ஐபிஎல் 6ஆவது தொடரில் களமிறங்கும் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவராக ரிக்கி பொன்டிங் (ஆஸி.) நியமிக்கப் பட்டுள்ளார். ஆலோசகர் கும்ப்ளே மற்றும் பயிற்சியாளர் ஜான் ரைட் இருவரும் இணைந்து இந்த முடிவை எடுத்துள்ளனர்.

# சர்வதேச கிரிக்கெட் சபையை கடுமையாக சாடுகிறார் ரணதுங்க

**சர்வதேசக் கிரிக்கெட் சபை கிரிக்கெட் போட்டிகளைப் பாதுகாக்க வேண்டுமே தவிர, சில நாடுகளையல்ல**



நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தாமை தொடர்பாக சர்வதேசக் கிரிக்கெட் சபையை இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க விமர்சித்துள்ளார். சர்வதேசக் கிரிக்கெட் சபை பல்லிழந்தது போன்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் போட்டிகளில் நடுவர்கள் வழங்கும் தீர்ப்புகளில் ஏற்படும் தவறுகளை இல்லாமற் செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்திற்கு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தொடர்ந்து எதிர்ப்புக்களை வெளிப்படுத்தி வரும் நிலையில் அந்தத் திட்டத்தைக் கட்டாயப்படுத்த சர்வதேசக் கிரிக்கெட் சபை மறுத்து வருகிறது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள அர்ஜுன ரணதுங்க, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையைக் குற்றஞ்சாட்டத் தான் விரும்பவில்லை எனவும், தான் சர்வதேசக் கிரிக்கெட் சபையைக் குற்றஞ்சாட்ட விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

நடுவர் மீள்பரிசீலனைத் திட்டத்தைப் பயன்படுத்துவதா இல்லையா என்பது குறித்த முடிவை போட்டிகளை நடாத்தும் நாட்டிடம் விடக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக சர்வதேசக் கிரிக்கெட் சபை உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவில்லை எனக் குறிப்பிட்ட அர்ஜுன ரணதுங்க, சர்வதேசக் கிரிக்கெட் சபை கிரிக்கெட் போட்டிகளைப் பாதுகாக்க வேண்டுமே தவிர, சில நாடுகளையல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# இல. வீரர்கள் பங்கு பற்றும் ஐ.பி.எல் போட்டிகள் தமிழகத்தில் நடக்குமா..?

இலங்கை வீரர்கள் பங்குபற்றினால் ஆசிய தடகள போட்டியை தமிழகத்தில் நடத்த முடியாது என, தமிழக அரசு அறிவித்த நிலையில், சென்னையில் நடக்கும் ஐ.பி.எல்., போட்டிகளில் இலங்கை வீரர்கள் பங்கேற்க முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஏப்., 3இல் ஆறாவது ஐ.பி.எல்., 'டுவென்டி-20' தொடர் ஆரம்பமாகிறது. இதில் சென்னை, மும்பை, கொல்கத்தா உட்பட 9 அணிகள் பங்கேற்கும். இந்த அணிகள் சென்னையில் தலா ஒரு போட்டியில் பங்கேற்கும். இதில் பஞ்சாப் தவிர மற்றைய அணிகளில் மொத்தம் 13 இலங்கை வீரர்கள் உள்ளனர்.


விபரம்: குலசேகரா, தனஞ்செயா (சென்னை), ஜெயவர்தனா, ஜீவன் மெண்டிஸ் (டில்லி), சேனநாயகே (கொல்கத்தா), மலிங்கா (மும்பை), மாத்யூஸ், அஜந்தா மெண்டிஸ் (புனே), பெரேரா (ராஜஸ்தான்), தில்ஷன், முரளிதரன் (பெங்களூரு), சங்கக்கரா, திசரா பெரேரா (ஐதராபாத்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் அணிகளின் போர்


# யாழ்ப்பாணக் கல்லூரி தடுமாற்றம்

# பற்றிக்ஸ் 108இற்கு 4 விக்கெட்



பொன் அணிகளுக்கு இடையிலான போரில் நேற்றைய முதல் நாள் ஆட்ட நேரமுடிபில் சென். பற்றிக்ஸ் கல்லூரி தனது முதல் இனிங்ஸில் 40 ஓவர்கள் முடிபில் 4 விக்கெட் இழப்பிற்கு 108 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

வடக்கில் பொன் அணிகளுக்கு இடையிலான போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 96ஆவது வருடாந்த கிரிக்கெட் போட்டி நேற்று காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இரு அணி இரசிகர்களின் ஆரவாரத்தின் மத்தியில் கோலாகலமாக ஆரம்பமானது.



இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெறவுள்ள பொன் அணிகள் போர் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணித்தலைவர் றிசாந் ரியூடர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 55 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 142 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அதிகபட்சமாக துடுப்பாட்டத்தில் பி.அபிராஜ் 56 ஓட்டங்களும் எஸ்.மதுஷன் 34 ஓட்டங்களும் அணித் தலைவர் ரி.நிமலேந்திரா 15 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி சார்பாக துணைத் தலைவர் டபிள்யூ.சி.எல் லிவிங்டன் 17 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டினையும் எ.அஜித் டார்வின் 13.1 ஓவர்கள் பந்துவீசி 37 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டினையும் இ.ஜெயந்தன் 4 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டத்தை விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸ்சை தொடங்கிய யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 40 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 108 ஓட்டங்களை பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் ரிஷாந்த் ரியூடர் 54 ஓட்டங்களையும், ஆர்.ஜாக்ஷா 34 ஓட்டங்களையும் ஜெ.சுபநேசன் ஆட்டமிழக்காமல் 11 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சார்பாக அணித் தலைவர் ரி. நிமலேந்திரா 12ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டினை கைப்பற்றினார்.




போட்டியின் இரண்டாவதும் இறுதியுமான நாள் இன்றாகும்.

போட்டியின் இன்றைய நாளில் இரு அணிவீரர்களும் வெற்றிபெற தமது முழு திறமைகளையும் வெளிப்படுத்தி விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் இன்றைய போட்டியும் விறுவிறுப்பாக அமையும் என எதிர்பார்க்கலாம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவருக்கு ஆயுள் தண்டனை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கர வாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஒருவருக்கு கண்டி உயர்நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

மத்திய மாகாணத்தில் பயங்கரவாத செயற் பாடுகளில் ஈடுபடல் மற்றும் அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்களை வைத்திருத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கண்டி உயர் நீதிமன்ற நீதிவான் மனி லால் வைத்தியரத்னவினால் இந்தத் தண் டனை விதிக்கப்பட்டுள்ளது.

மாத்தளையைச்சேர்ந்த 29 வயதான இராமநாதன் நவனீதன் என்பவருக்கே இவ் வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு ஆகஸ்ட மாதம் குறித்த நபரை பொலிஸார் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஹலால் சான்...

தனமாக சக வாழ்வுக்கு தடையை ஏற்படுத்தும் அடிப்படைவாத அமைப்புகளுடன் தொடர்ந் தும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் முன் னேற்றம் ஏற்படப்போவதில்லை.

இதனால் முஸ்லிம் நிறுவனங்கள் அல் லாத ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கப் பட்டுள்ள ஹலால் சான்றிதழ்களை அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா அமைப்பு இரத்துச் செய்ய வேண்டும் எனவும் அசாத் சாலி கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் முஸ்லிம் நாடுகளுக்கு உணவு உள்ளிட்ட பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களே ஹலால் சான்றிதழ் களைப் பெற்றுள்ளதாக ஜம்மியத்துல் உலமா ஏற்கெனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (எ-11)

## கூட்டமை...

ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கவுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானங் கள் கடுமையானதாக அமைய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு உள்ளது.

இதற்கான அழுத்தங்களை கொடுக்கும் வகையிலான சந்திப்புக்களிலும் கூட்டமைப் பின் தலைவர் சம்பந்தனும், சுமந்திரன் எம்.பி. யும் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் இருவரும் நான்கு நாட்கள்வரை யில் பிரித்தானியாவில் தங்கியிருப்பார்கள் எனத் தெரியவருகின்றது. (எ-11)

## சென்னை தூதரக...

தலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரனை படுகொலை செய்த புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. இதை மனச்சாட்சியுள்ள எந்த மனிதனும் ஏற் றுக் கொள்ளமாட்டான்.

2009 மே 19 அன்று ஐந்து மெய்க்காவலர் களோடு சரணடைந்த பாலச்சந்திரனை கொஞ்சம் கூட ஈவு இரக்கமில்லாமல் கொடூர மாகக் கொலை செய்துள்ளது இலங்கை அரசு. பிரபாகரனின் வம்சத்தில் யாரும் இருக் கக்கூடாது என்பதே அவர்களது எண்ணம்.

இலங்கை ஜனாதிபதியை சர்வதேச குற்ற வாளிக் கூண்டில் ஏற்ற வேண்டும் என்றால் உலகத் தமிழர்கள் அனைவரும் ஒன்றி ணைந்து போராட முன்வர வேண்டும்.

அடுத்த மாதம் மேற்கத்தேய நாடுகள் ஜெனிவாவில் கொண்டு வரும் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தை இந்திய அரசு சமரசமின்றி ஆதரிக்க வேண்டும் என்று மனிதநேய மக்கள் கட்சி வற்புறுத்துகிறது என்றார்.

போராட்டத்தின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. பின்னர் அனைவரும் இலங்கைத் தூதர கத்தை முற்றுகையிட முன்னேறிய போது பாதுகாப்பிற்கு நின்ற காவல் படையினர் அவர்களை தடுத்து கைது செய்தனர். (எ-11)

## பாலச்சந்...

நடத்த வேண்டும். இதுபற்றி சபையில் விவா திக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

அனைத்து எம்.பிக்களும் ஒரே நேரத்தில் எழுந்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்த, சபாநாயகர் மீராகுமார் அனுமதி மறுத்தார். இதனால் சபையில் அமளி ஏற்பட்டது.

ஹைதராபாத் குண்டுவெடிப்பு பிரச் சினையை பி.ஜே.பி.எம்.பிக்கள் கிளப்பினர். இதனாலும் சபையில் அமளி நிலவியது. அதையடுத்து பகல் 12 மணி வரை சபை ஒத் திவைக்கப்பட்டது. மேல் சபையில் இதே விவ காரங்கள் எதிரொலித்ததால், அந்த சபையும் 12 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. (எ-11)

## இந்தியா ஆதர...

ஐ.நாவின் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் இலங்கை விடயத்தில் இந்திய கடந்த தடவை எடுத்து நிலைப்பாட் டையே இந்தத் தடவை எடுக்கும் என்று இந்தி யப் பிரதமர் மன்மோகன் சிங் காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர் களிடம் கூறியுள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் நாடாளுமன்ற இரு அவை உறுப்பினர்களும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்து பேச்சு நடத்தியுள்ள னர்.

அந்தப் பேச்சுவார்த்தையின் போதே இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதாக இந்திய நாடாளுமன்றத்தின் மேலவைக்கான காங் கிரஸ் கட்சி உறுப்பினரான சுதர்சன நாச்சி யப்பன் தெரிவித்தார்.

அத்துடன் படிப்பினைகள் மற்றும் நல் லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், இலங்கை – இந்திய ஒப்பந் தத்தின் அடிப்படையிலான 13ஆவது திருத் தச்சட்டத்தை இலங்கை உடனடியாக அமுல் படுத்த வேண்டும் என்றும் இந்தியா வலி யுறுத்தும் என இந்தியப் பிரதமர் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறியுள்ளார்.

அதேவேளை வடக்கு கிழக்கு தமிழர் பாரம்பரிய நிலம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என தாம் இலங்கை அரசாங்கத்தை கேட்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட 37 அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று இந்தியா, இலங்கையை வலிறுத்தும் என்று இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கூறி யுள்ளார். (எ-11)

## மனித உரிமை கண்...

தொடர்பு இருப்பதாக ஒப்புக்கொள்ளுமாறு வலியுறுத்தி இவ்வாறு பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

140 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றை மனித உரிமை கண்காணிப்பகம் தயாரித்துள்ளது. 2006ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டுவரையில் பாலியல் துன்புறுத் தல்கள் தொடர்பில் 75 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் இவை.

வெளிநாடுகளில் வாழும் சில தீய சக்திகள் வேண்டுமென்றே ஆதாரங்கள் இல்லாமல் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றன.

வெளிநாடுகளில் இருந்து கொண்டு இலங்கைப் படையினர் குற்றம் செய்தார்கள் என்று கூறுபவர்கள் இலங்கைக்கு வந்து இங்குள்ள தமிழர்களிடம் கேட்டு உண்மை நிலையை அறிய வேண்டும். உள்நாட்டில் உள்ள தமிழர்கள் இராணுவம் தொடர்பில் நன்கு அறிவார்கள் என்றார். (எ-11)

## உதவி செய்ய அயலவர்...

வில் யாழ்.நகரிலுள்ள தொலைபேசி விற் பனை நிலையமொன்றில் வேலையினை முடித்த ரகுராஜினை அவரது சகோதரனான ரவிராஜ் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வேலையின் நிமிர்த்தம் காரணமாக சுன்னா கம் சென்றுவிட்டு அவ்வழியினூடாகவே தமது வீடு நோக்கிச் சென்றுள்ளனர்.

வீதியில் யாருமில்லாததால் வேகமாகவே மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றுள் ளார். இந் நிலையில் குறித்த பாலத்திற்கு அரு கில் சென்று கொண்டிருக்கையில் நாயொன்று குறுக்கே பாய்ந்ததில் தடம்புரண்ட மோட்டார் சைக்கிள் பாலத்தோடு மோதியுள்ளது.

இதில் இரு இரணைச் சகோதரர்களும் படுகாயமடைந்து குற்றுயிராக வீதியில் கிடந் துள்ளனர். அங்கு நின்றவர்கள் இருவரினை யும் வைத்தியசாலைக்கு கொண்டு செல் வதற்கு முயற்சி எடுக்காத காரணத்தினால் குற்றுயிராக வீதியில் இரத்த வெள்ளத்தில் கிடந்த ரவிராஜினை அவரது சகோதரரே கையில் தூக்கிக் கொண்டு அலறியபடி தெல்லிப்பழை வைத்தியசாலை நோக்கிச் சென்றுள்ளார்.

சிறிது தூரம் சென்ற பிற்பாடு பொதுமக் கள் சிலரின் உதவியுடன் தெல்லிப்பழை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சில மணி நேரங்களிலேயே மிக வும்படுகாயமடைந்த ரவிராஜ் உயிரிழந்துள் ளார்.

சடலம் யாழ்.போதனா வைத்திய சாலை யில் பிரேத பரிசோ தனைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளதோடு விபத்து தொடர்பில் தெல் லிப்பழை பொலிஸார் விசாரணையினை மேற்கொண்டு வருகின் றனர். (எ-4)

## நெஞ்சைப்...

வது போன்ற நெஞ்சை உறைய வைக்கும் காட்சிகளும் இடம்பெற்றுள்ளன.

பெண்கள் ஆடைகள் களையப்பட்டு நிர் வாணமாக சுட்டுக் கொல்லப்பட்டிருக்கும் காட்சி, விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத் தின் பேரில் பல பெண்களை ஒரு டிரக்கில் ஏற்றி இராணுவத்தினர் அழைத்துச் செல்லும் காட்சி, இராணுவத்தால் சிறை பிடிக்கப்பட்ட விடு தலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான கேணல் ரமேஷ் மன்றாடும் காட்சிகளும் இடம் பெற்றுள்ளன.

உலக நாடுகளால் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளை இலங்கை இராணு வத்தினர் பயன்படுத்தியிருப்பதும், இதனால் தமிழர்களின் உயிர்கள் கொத்துக் கொத்தாக பறிக்கப்பட்டதாகவும் நோ பயர் சூன் ஆவ ணப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

20 நிமிடக் காட்சிகளைக் கொண்ட இந்த ஆவணப்படம் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தி யுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)


**டோஹா கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு**
**(DOHA QATAR)** அரச அனுமதி இல. L.I. No 2490

இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட Air trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தி னூடாக கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

◆ மேசன்(Meson) ◆ இலக்ரிஷியன் (அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்) ◆ கார்பெண்டர் ◆ House painter ◆ பைப்லைன் பொருத்துனர் (அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்) ◆ கல்f லைசன் சாரதிகள் ◆ Welders ◆ கம்பி கூடுகட்டுபவர்கள் ◆ உதவியாளர் ◆ சுத்திகரிப்பாளர்

இன்னும் பல வாய்ப்புக்கள், அதி உயர் சம்பளம் மிக குறைந்த கட்டணத்தில் பயணமாக விரையுங்கள். கீழ்க் காணும் முகவரியில், மார்ச் மாதம் 1ம், 2ம், 3ம், 4ம் திகதி களில் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்புகொள்ளவும்
ஆவணங்கள்: Passtport, Passtport (Photo), தகைமை சான்றிதழ்

மார்ச்-01 Jaffna 0777929475
மார்ச்-02 முல்லைத்தீவு Holly Wood city
Word No:02, Mulliyawalai, Mullaitiru .0777929475, 0772393165
மார்ச்-03 வவுனியா Lanka voice
No.24, Sation Road.0777929475, 0772393165
மார்ச்-04 கொழும்பு Air trust
945, Maradana Road, Borella, Colombo-08, 0112676777
(C-2503)



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வட மாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

Gjpa tFg;Gf;fs; மிக விரைவில்.. T.P.021 222 8093
61, Kachcheri-Nallur Road, Jaffna
(முக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)
(1799)



**அவுஸ்ரேலியா, கனடா, அமெரிக்க பல்கலை. அனுமதி பெற்ற மாணவர்களுக்கு**
**விசா வழங்கல்**





University of Wollongong Australia, Toronto University Canada, Missouri University of Science and Technology America ஆகியவற்றுக்கு சிகரம் ஊடாக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான விசா அனுமதி கடிதம் 16-02-2013 சனிக்கிழமை சிகரம் நிறுவனத்தில் பணிப்பாளரால் வழங்கிவைக்கப்பட்டது.

இம்மாத இறுதியில் மேலும் ஒரு தொகுதி மாணவர்களுக்கு விசா அனுமதி வழங்கப்படவுள்ளது.

IELTS, வங்கிப்பணம், தூதரக நேர்முகத்தேர்வு எதுவுமின்றி Australia, Canada, America, New Zealand, Malaysia, UK ஆகிய நாடுகளில் கல்வி கற்க விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்

பல்கலைக்கழக அனுமதி முதல் தொழில் ஒன்றைப் பெறும் வரையில் உங்களுடன் தொடர்பிலிருந்து வழிகாட்டும் ஒரே நிறுவனம்

சிகரம் SIKARAM கல்வி - தொழில் வழிகாட்டி
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60
நேரடி: 0773 616 798
மி.அ.: edusikaram@gmail.com www.sikaram.lk



**தொடர்பாடலும், ஊடகக் கற்கையும்**

A/L 2013க்கான மீட்டல், கடந்த கால வினாவிடை (முழுதான விளக்கத்துடன்) வகுப்புக்கள் நடைபெறு கின்றன.

A/L 2014, 2015 க்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்பு : 0773 616 796
(பி.ப. 3.00 முதல் 9.00 க்குள் அழைக்கவும்)
(அ-2506)



**கார் வாடகைக்கு**

நீண்ட, குறுகிய நாள் வாடகைக்கு. சாரதி யுடனோ அல்லது இல்லாமலோ பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: 0779361427
(2002)



**ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்**
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

யாழில் பல்கலைக்கழக, தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் 5000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட



**Spoken English**
புதிய பிரிவுகள் ஆரம்பம்
- A/L பரீட்சையின் பின் பல்கலைக்கழகம் செல்ல உள்ளோருக்கு விசேடபிரிவுகள்
- உங்கள் A/L பெறுபேற்றுக்கேற்ப விசேட கட்டணக்கழிவுகள் (A-2500, B-2000, C-1500)

**IELTS**
- Unique Test Tips
- Latest course Materials

(Duration: 50 hrs with 5 mock exams)

City & Guilds A1, A2, B1 B2
International English for Speakers of other Language (ESOL) Diploma

DMI COMPUTER EDUCATION
**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

யாழ்ப்பாணம்: No.113. கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403
நெல்லியடி: M.M.V வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470
சாவகச்சேரி: கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம்: கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org